
மாலை 49 மணி 6 ஜூன் 2007 விலை ரூ10

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை வெளியீடு

சுவாமிமலை

அருள்மிகு சுவாமிநாதசுவாமி



# இந்திரா பூஜா மெட்டல் ஸ்டோர்ஸ்

5 சன்னதி தெரு, மயிலை, சென்னை - 600 004.
போன் : 24954245, 9884190885

**எங்களிடம்**

**பூஜைக்கு வேண்டிய**

**குத்துவிளக்குகள்,**

**காமாட்சி அம்மன் விளக்குகள்,**

**பஞ்சலோக விக்ரகங்கள்,**

**ஸ்படிக மாலைகள்,**

**ருத்ராட்ச மாலை,**

**வலம்புரி சங்குகள் கிடைக்கும்**

**மற்றும் திருக்கோவிலுக்கு வேண்டிய பெரிய பஞ்சலோக சிலைகளும், மர வாகனங்களும், தீபாராதனை செட்டுகளும், குடைகளும் கிடைக்கும். கும்பாபிஷேகத்திற்கு வேண்டிய அனைத்து பூஜை பொருட்களும் கிடைக்கும்.**



திருக்கோயில்

திருவள்ளுவர் ஆண்டு 2038 ஸர்வஜித்-ஆனி
மாலை 49 மணி 6 ஜுன் 2007

# அன்பார்ந்த வாசகப் பெருமக்களே!

**வணக்கம்.**

இந்துக்களில் உரிய பயிற்சியும், தகுதிகளும் உள்ள அனைத்து சாதியினருக்கும், அர்ச்சகர் பயிற்சி வழங்கிட, முதற்கட்டமாக மதுரை, பழனி, திருச்செந்தூர், திருவண்ணாமலை, திருவரங்கம் மற்றும் சென்னை ஆகிய இடங்களில் அர்ச்சகர் பயிற்சி நிலையங்கள் துவங்கப்பட்டுள்ளன என்பது ஒரு வரலாற்று சிறப்புமிக்க செய்தி என்பதை ஆன்றோர் ஏற்பர்.

ஆந்திர மாநில அரசும், திருப்பதி தேவஸ்தானமும், திருப்பதி திருமலையில் "ஸ்ரீ இராமானுஜருக்கு" மடம் அமைக்க நிலம் வழங்கியதும், இந்நிலத்தில், மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் ஆணைப்படி திருவரங்கம் அருள்மிகு அரங்கநாதர் திருக்கோயில் நிதியிலிருந்து "ஸ்ரீ இராமானுஜர் மடம்" மற்றும் "தமிழகத் திருக்கோயில்களின் தகவல் நிலையம்" ஆகியவற்றுக்காக கட்டடம் கட்டுவதற்கான பணிகள் மேற்கொள்ள இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு கே.ஆர்.பெரியகருப்பன் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது என்பது மகிழ்ச்சிக்குரியது.

தமிழக கிராமப்புற திருக்கோயில் பூசாரிகளின் வாழ்வில் ஒளியேற்றிட பூசாரிகள் நல வாரியம் அமைக்கப்பட்டு வாரியத்தின் முதற்கூட்டம் கூட்டப்பட்டுள்ளது.

மேலே உள்ள மூன்று செய்திகளும், தித்திக்கும் முக்கனிகளாகும். இவற்றை வழங்கிய மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் இந்து சமயப் பெருமக்களின் நன்றிக்குரியவராவார்.

தமிழில் உள்ள யோக சாத்திரங்களுள் தலைசிறந்ததும், சிவநெறியை வகுத்தும், விரித்தும் உரைக்கின்ற திருமூலரின் திருமந்திரச் சிறப்பினை இவ்விதழில் அழகுற எடுத்து இயம்பியுள்ளார் டாக்டர் திருமதி.இராதா தியாகராஜன் அவர்கள்.

காரைக்காலில் பிறந்த புனிவதியாரின் தெய்வத்திறனை மாங்கனியின் மூலம் பாரறியச் செய்தார் பரமன். அம்மையார் காரைக்கால்தந்த கனி என்றாலும், சைவச் சீரைக்கால் பதிக்கச் செய்த "தெய்வத் தமிழ் தேமாங்கனி" என்று புகழாரம் சூட்டி காரைக்கால் அம்மையார் பற்றிய கருத்தோவியத்தினைத் தனக்கே உரிய நடையில் தவழ விட்டுள்ளார் தமிழாகரர்.தெ.முருகசாமி அவர்கள்.

மானுடத்தின் செம்மாந்த வாழ்க்கைக்குரிய வாழ்வியல் நெறிகள் பற்றி குருபரதாசரின் குமரேச சதகத்தில் சுட்டியுள்ளவற்றைத் தொகுத்தளித்துள்ளார் வேலூர்.ம.நாராயணன் அவர்கள்.

ஒவ்வொரு வைணவருக்குமுள்ள ஆத்ம உறவினன் ஸ்ரீமன் நாராயணனே என்பதையும், பகவத் கைங்கர்யத்தை விட பாகவத கைங்கரியமே சிறந்தது என்பதை நம்மாழ்வார் தமது பாசுரங்களில் எவ்வாறெல்லாம் வழங்கியுள்ளார் என்பதை இவ்விதழில் தொகுத்தளித்துள்ளார் முனைவர் டி.எஸ்.இராமஸ்வாமி அவர்கள்.

பாண்டிய மன்னரின் அமைச்சராக இருந்து சிவனடியாராக மாறி, திருவாசகத் தேனை வழங்கிய மாணிக்கவாசகப் பெருமானுக்கு, திருப்பெருந்துறையில் இறைவன் அருள்புரிந்ததை "மாணிக்கவாசகரும் ஆவுடையார் கோயிலும்" எனும் தலைப்பில் வழங்கியுள்ளார் திரு.அழ.முத்துப்பழனியப்பன் அவர்கள்.

திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளின் கந்தபுராண நுண்பொருள் தொடரும், முனைவர் அ.அறிவொளி அவர்களின் திருத்தொண்டர் அருளிப்பாடுகள் தொடரும், பேராசிரியர் டாக்டர் சரசுவதி இராமநாதன் அவர்களின் கந்தரனுபூதி தொடரும் இவ்விதழில் இடம்பெற்றுள்ளன.

சித்துக்காடு என வழங்கப்படும் "திருமணத்தில்" எழுந்தருளியிருக்கும் ஸ்ரீநெல்லியப்பரின் மாண்புகளும், ஸ்ரீ நாராயண தீர்த்தருக்கு காட்சி தந்த ஸ்ரீ வரகூர் பெருமாளின் மகாத்தியமும் திருத்தல உலாக்கலாக இவ்விதழில் வெளிவந்துள்ளன.

அனைவரும் இதழினைச் சுவைத்து இன்பமுறுவோமாக.

அன்புள்ள

(த. பிச்சாண்டி, இ.ஆ.ப.)
சிறப்பு ஆணையாளர்
மற்றும் ஆணையாளர்

**இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,**
**119, உத்தமர் காந்தி சாலை,**
**சென்னை - 600 034.**

# திருப்பதி திருமலையில் ஸ்ரீ இராமானுஜர் மடம்







திருப்பதி திருமலையில் ஸ்ரீ இராமானுஜர் மடம் அமைக்க திருவரங்கம் அருள்மிகு அரங்கநாதர் திருக்கோயிலுக்கு ஆந்திர மாநில அரசும், திருப்பதி தேவஸ்தானமும் அனுமதி வழங்கி திருமலையில் 5000 சதுர அடி நிலம் அளித்தது.

தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களின் உத்தரவின்பேரில் இந்நிலத்தில் அருள்மிகு அரங்கநாதர் திருக்கோயில் நிதியிலிருந்து ஸ்ரீ இராமானுஜர் மடமும், தமிழகத் திருக்கோயில்களின் தகவல் மையமும் அமைக்க, ரூ 2 கோடி செலவில் கட்டுமானப் பணிகள் மேற்கொள்வதற்கான அடிக்கல் நாட்டு விழா 21.5.2007 அன்று திருப்பதி திருமலையில் நடைபெற்றுது.




அடிக்கல் நாட்டு விழாவில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு கேஆர். பெரியகருப்பன் அவர்கள்

திருவரங்கம், ஸ்ரீரங்க நாராயண ஜீயர் சுவாமிகள், திருப்பதி திருமலை ஸ்ரீரங்க ராமானுஜ ஜீயர் சுவாமிகள், ஸ்ரீ சடகோப ராமானுஜர் சுவாமிகள் ஆகியோர் முன்னிலையில் தமிழக இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு கேஆர். பெரியகருப்பன் அவர்கள் மடத்திற்கான அடிக்கல் நாட்டினார்.

இவ்விழாவில், தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறைச் செயலாளர் திரு. து. இராசேந்திரன் இ.ஆ.ப., அவர்கள், இந்து சமய அறநிலையத்துறை சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர் திரு. த.பிச்சாண்டி இ.ஆ.ப., அவர்கள், அறங்காவலர் குழு தலைவர் திரு. எம். வெங்கடாசலம், இணை ஆணையர் / செயல் அலுவலர் திருமதி மா. கவிதா, இணை ஆணையர்(திருப்பணி) திருமதி ந. திருமகள், இணை ஆணையர் / செயல் அலுவலர்(அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணி) திருமதி. ஹரிபிரியா, அறங்காவலர்கள் கிரிஜா மோகன், தி.ரா. முரளி, டி.சேகர், சுழல் முறை அறங்காவலர் கோ.சு.வா. அப்பன் சுதர்சன பிரணதார்த்திஹர ரங்கச்சார் சுவாமிகள், திரு. ராம்குமார், மற்றும் நிர்வாகப் பொறியாளர் (தலைமையிடம்) எம்.பன்னீர்செல்வம் ஆகியோர் பங்கேற்றனர்.







சென்னை, திருவல்லிக்கேணி, அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில் - அர்ச்சகர் பயிற்சி நிலையத்தில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள், தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை அரசு செயலர் திரு.து.இராசேந்திரன், இ.ஆ.ப., அவர்கள், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர் திரு. த.பிச்சாண்டி, இ.ஆ.ப., அவர்கள் மற்றும் பயிற்சி நிலைய ஆசிரியரும், மாணவர்களும்.

## இதழின் உள்ளே ....


| | | |
|---|---|---|
| 1. | அருள்மிகு காளியம்மன் போற்றிகள் | 4 |
| 2. | திருமூலரின் தத்துவமும், நெறியும்- டாக்டர் திருமதி.இராதாதியாகராஜன், எம்.ஏ., பி.எச்டி | 6 |
| 3. | நடராஜருக்கு திருமணம் நடைபெறும் அபூர்வ தலம்-பனையபுரம் அதியமான் | 9 |
| 4. | காரைக்கால் தந்த கனி- தமிழாகரர் தெ.முருகசாமி | 12 |
| 5. | வரகூர் தல பெருமையும், அங்கு வீற்றிருக்கும் தெய்வத்தின் மகிமையும் | 17 |
| 6. | வேலும் மயிலும் துணை- டாக்டர் சரஸ்வதி இராமநாதன் | 20 |
| 7. | குமரேச சதகம் காட்டும் வாழ்வியல் நெறிகள்-வேலூர் ம. நாராயணன் | 24 |
| 8. | அரசராக இருந்து ஆழ்வாரான குலசேகர ஆழ்வார்- திரு.பெ.இராமநாதபிள்ளை- செயல் அலுவலர் | 27 |
| 9. | இறைவன் எழுதிய தமிழ் மடல்- பேராசிரியர் முனைவர் ச.கணபதிராமன் | 29 |
| 10. | காதல் மற்றுயாதுமில்லை- முனைவர் டி.எஸ்.ராமஸ்வாமி | 31 |
| 11. | திருத்தாண்டக அருளிப்பாடுகள்- முனைவர் அ.அறிவொளி | 33 |
| 12. | கந்தபுராண நுண்பொருள்- திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் | 35 |
| 13. | மாணிக்கவாசகரும் ஆவுடையார் கோயிலும் | 37 |

# அருள்மிகு காளியம்மன் 108 போற்றிகள்



1. ஓம் அஞ்சுவட்டத்து அம்மனே போற்றி
2. ஓம் அண்டங்கள் வானில் அமைத்தாய் போற்றி
3. ஓம் அண்ட பிண்டம் அணைவாய் போற்றி
4. ஓம் அத்தனைப் பொருளிலும் நிற்பாய் போற்றி
5. ஓம் அநாகதச் சக்கரம் அமர்ந்தாய் போற்றி
6. ஓம் அலைமகள் கலைமகள் மலைமகள் போற்றி
7. ஓம் அனைத்திலும் காரணம் ஆவாய் போற்றி
8. ஓம் அன்பு வடிவாகிய அன்னையே போற்றி
9. ஓம் ஆதிசக்தியாய் அருள்வாய் போற்றி
10. ஓம் ஆலங்காட்டில் ஆடுவாய் போற்றி
11. ஓம் ஆனந்த கோசத்து அரும்புவாய் போற்றி
12. ஓம் ஆடல் கண்டருளிய அணங்கே போற்றி

13. ஓம் உச்சையினியில் உதிப்பாய் போற்றி
14. ஓம் எழுநிறமாகிய பழையோள் போற்றி
15. ஓம் எழுவரின் இளைய மகளே போற்றி
16. ஓம் என்றும் புதிய எழிலே போற்றி
17. ஓம் ஒளிநிறமாகிய பொன்னி போற்றி
18. ஓம் ஓசைஒலியெலாம் ஆனாய் போற்றி
19. ஓம் க.ஏ.ஈ.ல. ஹ்ரீம் என்றால் வரம் தருவாய் போற்றி
20. ஓம் க.ஏ.ஈ.ல.ஹ்ரீம் எனும் மந்திர வர்ணமே போற்றி
21. ஓம் க.ஏ.ஈ.ல. ஹ்ரீம் மந்திரக் கலையே போற்றி
22. ஓம் க.ஏ.ஈ.ல. ஹ்ரீம் மந்திர சித்தியே போற்றி
23. ஓம் க.ஏ.ஈ.ல. ஹ்ரீம் வடிவமே போற்றி
24. ஓம் கங்காள மாலை தரித்தாய் போற்றி
25. ஓம் கண்கள் ஆயிர பவானி போற்றி
26. ஓம் கதம்பப் பூ மாலையில் களிப்பாய் போற்றி
27. ஓம் கதம்பவன வாழ்வில் மகிழ்வாய் போற்றி
28. ஓம் கதலிவனத்துச்சுந்தரி போற்றி
29. ஓம் கந்தனைப் பெற்ற கருணையே போற்றி
30. ஓம் கபாலம் ஏந்தும் கமலா போற்றி
31. ஓம் கபிலை நிறத்துப் பார்வதி போற்றி
32. ஓம் கமலாலயம் நடுநிற்கும் காளி போற்றி
33. ஓம் கருதுவார் நெஞ்சில் காமதேனு போற்றி
34. ஓம் கருணை வெள்ளக் கடலே போற்றி
35. ஓம் கருமமும் தருமமும் காப்பாய் போற்றி
36. ஓம் கவனம் ஈர்க்கும் காரிகை போற்றி
37. ஓம் கவிதை விரும்பும் பூரணி போற்றி
38. ஓம் கலிகாலக் கற்பகத் தருவே போற்றி
39. ஓம் கற்பனை கடந்த சோதி போற்றி
40. ஓம் கற்பூரம் கலக்கும் கஸ்தூரி போற்றி
41. ஓம் கற்பூரம் அணியும் தாயே போற்றி
42. ஓம் கஸ்தூரிப் பொட்டில் ஒளிர்வாய் போற்றி
43. ஓம் கஸ்தூரிமானில் கலந்தாய் போற்றி
44. ஓம் க்ரீம் ஹ்ரீம் கல்யாணியே போற்றி
45. ஓம் க்ரீம் ஹ்ரீம் மந்திர மருந்தே போற்றி
46. ஓம் காசிக் கடவுள் கனவே போற்றி
47. ஓம் காசியில் அமர்ந்த காளி போற்றி
48. ஓம் காமகலாத்தியானக் காட்சி போற்றி
49. ஓம்காமகோட்டத்துக் காமாட்சி போற்றி
50. ஓம் காமமும் பற்றும் களைவாய் போற்றி
51. ஓம் காம ரூபமாய்க் கனிவாய் போற்றி
52. ஓம் காலபைரவர் துணையே போற்றி
53. ஓம் காலமும் கடந்த காரணி போற்றி
54. ஓம் காலனை வெல்லும் காலராத்திரி போற்றி
55. ஓம் காளையார் கோயில் சுவர்ணகாளி போற்றி
56. ஓம் குமரிப் பூசையில் குளிர்வாய்போற்றி
57. ஓம் கைவல்யம் கைகளில் காட்டுவாய் போற்றி
58. ஓம் கோகர்ணத்தின் குலக்கொடி போற்றி
59. ஓம் கோடி வடிவுடைக் கோசலை போற்றி
60. ஓம் கோலவிழி அம்மையாய்க் குலவுவாய் போற்றி
61. ஓம் சச்சிதானந்த நிலையமே போற்றி
62. ஓம் சடையன் உவக்கும் சடைச்சி போற்றி
63. ஓம் ச.த.ப.சக்தியைச் சார்வாய் போற்றி
64. ஓம் சித்திரை ஆதிரையில் சிறந்தாய் போற்றி
65. ஓம் சிவனுக்கும் தாய்ப்பால் அருளினை போற்றி
66. ஓம் சிவனார் சினமான பத்ரகாளி போற்றி
67. ஓம் சூருடைக் கானகம் உகந்தாய் போற்றி
68. ஓம் தட்சனைத் தகர்த்த நவகாளி போற்றி
69. ஓம் தமோ குணமாம் தனயை போற்றி
70. ஓம் தாமரைச் சிவப்புக் கண்ணி போற்றி
71. ஓம் தாருகன் பேருரம் கிழித்தாய் போற்றி
72. ஓம் திசையெலாம் நிறையும் திகம்பரி போற்றி
73. ஓம் தில்லையில் ஆடும் திருவே போற்றி
74. ஓம் துர்க்கை உருவான திரிசூலி போற்றி
75. ஓம் துவரைப்பதியின் பத்ரகாளி போற்றி
76. ஓம் தோல்வி அறியாத தோகை போற்றி
77. ஓம் நடுநிசி உகக்கும் பைரவி போற்றி
78. ஓம் நிராதார ஸாதார நிலையே போற்றி
79. ஓம் நீலநிறம் படைத்த பவானி போற்றி
80. ஓம் நெஞ்சின் அழுக்கெலாம் நீக்குவாய் போற்றி
81. ஓம் நெருப்பின் நிறமாய் நிற்பாய் போற்றி
82. ஓம் பஞ்சமகார பகவதி போற்றி
83. ஓம் படைத்துக் காத்து ஒடுக்குவாய் போற்றி
84. ஓம் பரணியில் தோன்றிய பரமே போற்றி
85. ஓம் பாவம் போக்கும் பவதாரணி போற்றி
86. ஓம் பிரம்மம் தொழில்படத்தூண்டுவாய் போற்றி
87. ஓம் பூதமும் பொறியுமாய்ப் பொலிந்தாய் போற்றி
88. ஓம் மங்கலமாகிய மகாராத்திரி போற்றி
89. ஓம் மங்கலம் அருளும் மகமாயி போற்றி
90. ஓம் மங்கலமரபுடை மதுரகாளி போற்றி
91. ஓம் மனம் விழை வடிவாய் வருவாய் போற்றி
92. ஓம் மாகாளரின் மனைவி மாகாளி போற்றி
93. ஓம் மாயா என்னும் மோகினி போற்றி
94. ஓம் மாற்றம் புரியும் காலராத்திரி போற்றி
95. ஓம் முடியாத எல்லாம் முடிப்பாய் போற்றி
96. ஓம் முப்புரம் எரித்த முதலே போற்றி
97. ஓம் முயற்சியின் சக்தியாய் முளைப்பாய் போற்றி
98. ஓம் யமனை நசிக்கும் யாமளை போற்றி
99. ஓம் யாதுமாகிய இறைவி போற்றி
100. ஓம் யாவும் வசப்பட வைப்பாய் போற்றி
101. ஓம் யோகக் குலத்தில் இணைவாய் போற்றி
102. ஓம் யோகக் குலம் விரும்பும் யோகினி போற்றி
103. ஓம் வங்கக் காளியாய் வாழ்வாய் போற்றி
104. ஓம் வஞ்சகர் உயிர் அவி உண்பாய் போற்றி
105. ஓம் வீரம் உகக்கும் விசையே போற்றி
106. ஓம் வெயில் மழை உகக்கும் வெக்காளி போற்றி
107. ஓம் வெற்றிவேல் தடக்கை கொற்றவை போற்றி
108. ஓம் வேதத் தமிழே போற்றி போற்றி.

# திருமூலரின் தத்துவமும், நெறியும்




டாக்டர் திருமதி இராதா தியாகராசன்,
எம்.ஏ.,பிஎச்.டி.,

வாழ்வியல் தத்துவம், சமயம் என்பவை பற்றி அழகுற அமைந்த நூல் திருமந்திரம். சைவத் திருமுறைகளுள் பத்தாம் திருமுறையாக உள்ள இந்நூலில், ஒன்பது பிரிவுகள் உள்ளன. இதனை அருளிய திருமூலர், இதில் மூவாயிரம் பாடல்களை அமைத்தார். இதனை, **''மூலன் உரைசெய்த மூவாயிரந் தமிழ்''** என்று அவரே பாடுவதால் அறியலாம். தமிழில் உள்ள யோக சாத்திரங்களுள், தலைசிறந்தது திருமந்திரமே ஆகும். இது சிவயோக நெறியை வகுத்தும் விரித்தும் உரைக்கின்றது.

இந்நூலின் முதல் தந்திரத்தில் **''உபதேசம்''** என்னும் தலைப்பு அமைந்த முப்பது பாடல்களில் சைவ சித்தாந்தத் தத்துவத்தின் அடிப்படைக் கொள்கைகளைக் கூறும் திருமூலர், அடுத்துவரும் தந்திரங்களில், அத்தத்துவங்களை வாழ்வில் நடைமுறைப் படுத்துவதற்கு உரிய யோக நெறி வாழ்வியலை மிக விரிவாகக் கூறுகின்றார்.

யோகநெறியைக் கடைப்பிடித்து,




உடம்பில் இருக்கும்போதே, இறைவனுடன் கலந்து பேரின்ப அனுபவத்தைப் பெறலாம் என்பது திருமூலர் கூறும் முடிவு. இந்த அரிய அனுபவத்தைத் திருமூலர் திருவாவடுதுறையில் பெற்றார். சிவானுபவத்தைப் பெற்ற அவர், அப்பரம்பொருள் தந்த அனுபவத்தைக் கொண்டு யோக நெறி விளக்கமாகத் திருமந்திரத்தைப்பாடி அருளினார்.

**''என்னை நன்றாக இறைவன் படைத்தனன்**
**தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே''**

என அவரே இதனைக் கூறுவார்.

இதையே வேதாந்த சூத்திரத்தில் ''தத்வமசி'' என்ற மகாவாக்கியமும் கூறுகிறது. தத்வமசி மகா வாக்கியத்திற்கு, **''நீஅதுவாக இருக்கிறாய்''** எனப் பொருள் கூறுவர். ஆனால், திருமூலர் அவ்வாறு பொருள் கொள்ளவில்லை. தமது சொந்த அனுபவத்தைக் கொண்டு, **''நீஅது ஆனாய்''** என்று பொருள் கூறுகின்றார். **''நீஅதுவாக இருக்கிறாய்''** எனப் பொருள் கூறினால், ஜீவனும் சிவனும் ஒன்றே, சிவனே ஜீவனாகத் தோற்றம் அளிக்கிறான் என்றும் ஜீவன் தன்னை வேறாக எண்ணிக் கொள்வது அதன் அறியாமையின் விளைவு - என்றும் கொள்ள வேண்டியுள்ளது. இருப்பது சிவம் மட்டுமே என்றால், அறியாமை அவனுடையது என்றல்லவா ஆகிவிடும்? முற்றறிவு உடையவன் ஆகிய சிவனை அறியாமை உடையவன் என்று கூறுவது பொருந்துமா?

உண்மைப் பொருள் ஒன்றா, இரண்டா என்று ஆராய்ந்த அறிஞர்கள், தருக்க முறையில் வாதங்களையும், எதிர் வாதங்களையும் கூறி, ஒருவருக்கு ஒருவர் மாறுபட்ட முடிவுகளைக் கூறியுள்ளார்கள். ஆனால் திருமூலர் தர்க்க வாதங்களில் ஈடுபடாமல் யோகநெறியில்

நின்று இறையனுபவம் பெற்று, இந்த ஆய்வு பற்றிய தமது முடிவைக் கூறுகின்றார். அறிவுப் பொருள் ஆகிய இறைவனும் ஆன்மாவும் வெவ்வெறு. ஆனால் ஆன்மா, சிவத்தின் அருளால் சிவமாகிறான் என்பதே அவர் தமது அனுபவத்தில் கண்டறிந்த உண்மையாகும். ஆதலால், **''நாமே சிவம்''** என்று கருதினால், அது நமது அறியாமை என்று கூறுகின்றார் திருமூலர்.

**''பிரான் நல்லன் நாம் எனில், பேதை உலகம்''** என்பது அவர் வாக்கு. இதில் சிவன் நமக்கு நல்ல தலைவன், நாம் அவனுக்கு அடியவர் என்றும் கூறுகின்றார்.

**''பிரான் நல்லன் நாம் எனில், பேதை உலகம்**
**குரால் என்னும் என்மனம் கோயில்கொள் ஈசன்**
**அராநின்ற செஞ்சடை அங்கியும் நீரும்**
**பொரா நின்றவர் செய, புண்ணியன் தானே''**

இதில் ''சிவன், பாம்பு திகழும் சடைமுடியும், தீச்சுடரை ஏந்திய கையும், கங்கை தங்கிய தலையுமாகக் காட்சிதருவான்'' என்றும், அவன் தரும் அருளால், நமது அறிவு, அருளறிவாகும் என்றும் நாம் அந்தப் புண்ணியனாகவே ஆவோம் என்றும் கூறுகின்றார். குரால் என்பது பசு. எனவே, உயிர்கள் பசு ஆகும், சிவம் பதியாவான்.

ஆன்மாவிற்கும் சிவத்திற்கும் உள்ள வேறுபாட்டை அவர் ஓரிடத்தில் சுட்டிக் காட்டுகின்றார். அவ்வேறுபாடு மிகப் பெரிது என்பதை ''அறச்சேய சிவம்'' என்று சிவனுக்கு அடைமொழி அமைப்பதால் புலப்படுத்து கின்றார். **''அப்பாலைக்கு அப்பாலைப் பாடுதுங்காண் அம்மானாய்''** என்று மணிவாசகர் கூறுவது போல், எல்லாவற்றையும் கடந்தது என்ற பொருளில் **''அறச்சேயசிவம்''** என்று கூறுகின்றார்.

நாம் சிவத்தை தெரிந்து கொள்ள முடியாதபடி, நம் அறிவை மறைக்கும் ஆணவமலத்தைப் பற்றி எடுத்துக் கூறி, பதியாகிய சிவம், கருணை வைத்து, நமக்கு அருள்தந்தால் ஆணவமலம் நீங்கிவிடும் என்ற கருத்தமைய

**''பதி அணுகின் பசு, பாசம் நில்லாவே''**

என்று கூறுகின்றது திருமந்திரம்.

சிவன் நமது மனத்தையும் உடம்பையும் கோயிலாகக் கொண்டு வெளிப்பட்டு, அருள்செய்வான். இதை

**''எந்தையே, ஈசா உடல் இடங்கொண்டாய்**
**யான் இதற்கு இலன் ஓர் கைம்மாறே''**

என்று பாடுவார் மாணிக்கவாசகர்.

இதையே யோகானுபவமாகப் பெற்ற திருமூலர்

**''உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்**
**வள்ளற் பிரானார்க்கு வாய்கோபுர வாசல்**
**தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்**
**கள்ளப் புலனைந்தும் காளா மணி விளக்கே''**

என்று பாடுகின்றார்.

சீவனின் உணர்வு, சிவத்தின் சார்பால், சிவமயம் ஆகின்றது. இதை விளக்க ஓர் உவமை கூறுவர் பெரியோர். ''பெத்தத்தில் எப்படியோ, அப்படியே முத்தியிலும்'' என்பது அந்த உவமை. ஆணவ மலத்தால் அறியாமை வயப்பட்டு, மாயையின் காரியமாகிய உடம்பை, நாம் என்று கருதுகின்றோம். அவ்வளவிற்கு மாயையுடன் ஒன்றாகி விட்டோம். மாயையின் சார்பில், மாயையாகி விட்டோம். அதைப் போலவே, சிவம் தனது கருணையால், நம்மைத் தனது சார்பில் வைக்கும்போது, ஆணவமலம் விலகி விடுகின்றது. நாம் நமது இயல்புப்படி, (சார்ந்ததன் வண்ணமாகும் இயல்பு) சிவத்தின் சார்பில் சிவமாகின்றோம்.

இந்த உண்மையைச் சிவஞானபோதம் என்ற நூல் **''அவனே தானே ஆகிய அந்நெறி ஏகனாகி''** என்று கூறும். இதற்குச் சிவஞான முனிவர், **''ஈண்டுப் பரமேசுவரன், இவ்வான்மாவாய் நின்ற முறைமையால், அவனிடத்து ஏகனாகி நிற்க''** என்று உரை கூறுவார். சிவம் உயிரினிடம், அவ்வுயிராகவே இருக்கிறது, அதுபோல உயிரும் சிவனிடம் அச்சிவனாகவே நிற்பதாகும் என்பது இதன் கருத்து.

இக்கருத்து அமையத் திருமூலர்,

**''பேச்சற்ற இன்பத்துப் பேரானந் தத்திலே**

**மாச்சற்ற என்னைச் சிவமாக்கி மாள்வித்துக்**

**காச்சற்ற சோதி கடன் மூன்றுங் கைக்கொண்டு**

வாச்சபுகழ்மாளத் தாள்தந்து மன்னுமே

என்று பாடுவார்.

இந்த நிலையில், உயிர், தன்வயம் இழந்து, சிவத்துடன் ஒன்றிக் கலந்து, பேரின்பம் அனுபவிக்கும். அப்போது அச்சிவானந்தத்தை உணருமே தவிர தான் உணர்கின்றோம் என்ற உணர்வைக் கொள்ளாது. இதை **''தான் என ஒன்று இன்றியே, தான் அதுவாய்''** என்று கூறுவார் சிவஞான போத ஆசிரியர். இதை ""Unitive way»'' என்பர், அருளியலாளர் (Mystics). திருவாசகத் தேன் பொழிந்த மணிவாசகர், இதனை

**''நவமான செஞ்சுடர் நல்குதலும் நாம் ஒழிந்து**

**சிவம் ஆனவா பாடித் தெள்ளேணம் கொட்டாமோ''**

என்று பாடுவார். இந்தக் கருத்தெல்லாம் அமைய, ''தத்துவமசி'' மகா வாக்கியத்தை விளக்குகின்றார் திருமூலர்.

**''நீஅதுவானாய் என நின்ற பேருரை**

**ஆயது நான் ஆனேன் என்ன அமைந்து, அறச்**

**செய சிவமாக்கும் சீர்நந்தி பேரருள்**

**ஆயதுவாய், அனந்தானந்தி யாமே''**

(திருமந்திரம் - 2596)

என்பது அவர் பாடல். நந்தி என்று அவர் சிவத்தைக் குறிப்பார். நந்தியின் பேரருள்தான் நம்மைச் சிவமாக்குகின்றது - என்பதை இப்பாடலில் வலியுறுத்துகின்றார்.

மேற்கூறியவற்றை மீண்டும் விளக்கிக் கூறுமிடத்து:

''தத்வமசி'' வாக்கியம் ''நீஅதுவாக இருக்கிறாய்'' எனப் பொருள் கொண்டால், சிவமே சீவனாகிறான் என்று பொருள் பெற்றுவிடும். அவ்வாறு கொள்ளாமல் **''நீஅது ஆனாய்''** எனப் பொருள் கொள்ளின், ஆணவமலத்தால் மறைக்கப்பட்ட உயிர் சிவனருளால் ஆணவமல மறைப்பு நீங்கி, உயிர் சிவனருள் முதலில் பெற்றுப் பின் சிவம் ஆகின்றது. அப்போது, நீஎனச் சுட்டப்பட்ட உயிர் சிவனருள் பெற்று அது எனச் சுட்டப்பெறும் சிவன் தன்மையை அடைகிறது.

**''சித்தமல மறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட அத்தன் எனக்கருளியவாறு ஆர் பெறுவார் அச்சோவே''** என்ற மணிவாசகப் பெருமான் கருத்து இங்கு ஒப்பு நோக்கத் தக்கது.

மேலும் அப்பாட்டின் பொருளை நோக்குமிடத்து,


**''நீஅது ஆனாய்''** எனப் பொருள்படும் முன்னிலைத் தொடரான **''தத்வமசி''**- வாக்கியம் சீடனால் அனுபவமாகப் பெறப்படும்போது, **''நான் அது ஆனேன் என்ற பொருள்படுமாறு, ''அகம் பிரம்மாஸ்மி''** என்று சொல்லப்படும். இங்ஙனம் உயிர் அனுபவம் பெறுமாறு சிவனது அருளே செய்கிறது. இவ்வனுபவத்தில் உயிர் முதலில் அருள்மயமாகும். பின்பு, சிவமாகும். அளவு இல்லா ஆனந்தத்தை உடையதாகும்.''

என்று திரு சுப.அண்ணாமலை அவர்கள் பொருள் கொண்டிருப்பது மிகவும் பொருத்தமுடையதும், மகிழ்ச்சி தருவதுமாகும்.

## தியானம் என்றும் அற்புத மருந்து

ஒழுங்கான தியான நேரத்தைக் கடைப்பிடியுங்கள். தியானம் மனதை அமைதிப்படுத்துகிறது. மனதில் நிச்சலத்தன்மையை அது உருவாக்குகிறது. ஒரு மணி நேரம் நீங்கள் ஆழ்ந்து தியானித்தால்கூட அந்த தியானத்தின் மூலம் மனதில் ஏற்படுத்தப்பட்ட பதிவு மீதமுள்ள இருபத்து மூன்று மணிநேரமும் மனதில் தங்கி நிற்கிறது. முன்போல மனம் அலைந்து திரியாது. படிப்படியாக தினசரி தியானத்தின் கால அளவைக் கூட்டுங்கள். இது உங்கள் அன்றாட வேலையுடன் குறுக்கிடாது. ஏனெனில் தியானம் உங்களது பல்வேறு திறமைகளை அதிகரித்து குறைந்த நேரத்தில் வேலைகளை செய்வதற்கான ஆற்றலை உங்களுக்கு அளிக்கிறது.

- சுவாமி சிவானந்தா



# நடராஜருக்கு திருமணம் நடைபெறும் அபூர்வ தலம்


திருமணம் நடைபெறும் நடராஜர்

பனையபுரம் அதியமான்

தில்லையில் நடனமாடிய எம்பெருமான் நடராஜருக்கு அனைத்து சிவாலயங்களிலும் ஆருத்ரா தரிசனம் நடைபெறுவது அடியார்கள் அறிந்ததே. ஆனால், நடராஜப் பெருமானுக்கு ஆருத்ரா அன்று திருமணம் செய்து வைக்கும் திருவிழா நிகழும் அபூர்வ தலமாக திகழ்வது அனைவரும் அறியாத ஒன்று. இந்த அபூர்வ தலம் திருவள்ளூர் மாவட்டத்தில் அமைந்துள்ள திருமணம் என்ற என்ற தொன்மை வாய்ந்த திருத்தலம் ஆகும். இன்று திருமணம், ஊராட்சியாக விளங்கினாலும் சித்துக்காடு என்ற குக்கிராமத்தின் பெயரால் மட்டுமே அறியப்படுகிறது.

### தொன்மைச் சிறப்பு

திருமணத்தில் சோழன் மற்றும் பாண்டிய மன்னர்களின் திருப்பணியில் உருவானவை, நெல்லியப்பர் திருக்கோயில், சுந்தராஜ பெருமாள் திருக்கோயில் மற்றும் எழில் மிகுந்த திருக்குளம் ஆகியவை.

திருமணத்தில் உள்ள பெருமாள் கோயிலின் இராஜகோபுர முகப்பில் முதலாம் சுந்தரபாண்டியன் கல்வெட்டு (கி.பி. 1268) ஒன்று காணப்படுகிறது.

இதன் மூலம் பிடாரிப்பட்டு சிவன் கோவிலுக்கு (இறைவன் பெ்யர் அருளானந்தன்) நிலக்கொடை வழங்கிய செய்தி இதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

புலியூர் கோட்டத்தில் உள்ள ''திருமன்றம்'' என திருமணம் குறிப்பிடப்பட்டுள்ளது. திருமன்றமே மருவி திருமணம் என்றாகி இருக்கலாம். திருமண வரம் அருளும் இறைவன் இவ்வூரில் எழுந்தருளியிருப்பதால், ஊர் பெயரும் திருமணம் என அழைக்கப்படுகிறது என்பது அடியார்களின் விளக்கம்.

### சித்தர்கள் பூமி

நெல்லியப்பர் திருக்கோயிலில் ப்ரணதீபிகா சித்தர் மற்றும் ஜடாமுடி சித்தர் எனப்படும் படுக்கைச் சித்தர்களின் திருவுருவங்கள் இவ்வாலய தூண்களில் புடைப்புச் சிற்பங்களாக காட்சியளிக்கின்றன. ப்ரணதீபிகா சித்தர் நந்திதேவரின் நந்தி மண்டப முகப்பில் காணப்படுகிறார். இவர் இதயக் கோளாறுகளைத் தீர்த்து வைப்பவர் என கூறப்படுகிறது.

இதே போல படுக்கை சித்தர் சிற்பம், அம்மன் சன்னதியை ஒட்டியுள்ள மண்டபத் தூணில் காணப்படுகிறது. இவர் உலக உயிர்களை காக்கும் பணியினை செய்து வருவதாக கூறப்படுகிறார். பெருமாள் கோயிலின் ஆண்டாள் சன்னதி மண்பத்தில் உள்ள தூணில் விருஷக் கொடி சித்தர் எனப்படும், கருடக் கொடி சித்தர் அமைந்துள்ளார். இவர் கண் கோளாறுகளைப் போக்குபவர் என்பது ஐதீகம்.

இவை தவிர, இத்திருக்கோயிலில் பெயர் தெரியாத சித்தர்க்ளின் புடைப்புச் சிற்பங்கள் ஏராளமாக உள்ளன. இதனால்தானோ என்னவோ இப்பகுதிக்கு சித்தர்காடு என்ற பெயர் வழங்கப்பட்டு, சித்துக்காடு என்ற பெயரில் தற்போது அழைக்கப்படுகிறது.

ஆதிசங்கரர், காரைக்கால் அம்மையார் ஆகியோர் இத்தலத்து இறைவனை வழிபட்டு உள்ளனர்.

### இறைவன் நெல்லியப்பர்

இறைவனின் பெயர் ஸ்ரீ தாத்திரீஸ்வரர் எனப்படும் ஸ்ரீ நெல்லியப்பர் ஆவார்.

இறைவன் இங்குள்ள நெல்லிவனத்தில் தோன்றியதால், நெல்லியப்பர் என்ற பெயரே நிலைத்துள்ளது. நெல்லிக்காய் கிடைக்கும் காலங்களில் நெல்லிக்கனி பிரசாதமாகவும் வழங்கப் படுகிறது.

### இறைவி பூங்குழலி

இறைவியார் பெயர் ஸ்ரீ ப்ரசூன குந்தளாம்பிகை எனப்படும் பூங்குழலி. பூந்தோட்டத்தில் தோன்றியவள் என்பதால் இறைவிக்கு பூங்குழலி என்ற திருப்பெயர் உண்டானது.

### திருமணத்தில் நடைபெறும் திருமணம்

திருமணம் ஊராட்சியில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ நெல்லியப்பர் ஆலயத்து நடராஜருக்கு, மார்கழி மாதத்தில் வரும் திருவாதிரை நட்சத்திர ஆருத்ரா விழாவில், ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கும், ஸ்ரீ சிவகாம சுந்தரிக்கும் ஸ்ரீ மாணிக்கவாசகர் முன்னிலையில் திருமண உற்சவம் நடைபெறுகிறது. இந்த விழா வேறெந்த ஆலயத்திலும் காணப்படாத அபூர்வ விழா என்பது குறிப்பிடத்தக்கது.

ஆருத்ரா முதல் நாள் இரவு அபிஷேக ஆராதனை மறுநாள் அதிகாலை 41/2 மணிக்கு நடராஜருக்கு திருமண வைபோகம் வெகு விமரிசையாக நடைபெறும்.

இதன்பின் வீதியுலா - காலை 10 மணி அளவில் இராஜ கோபுர வாயில் முன்பாக திருவெம்பாவை பாடப்பெற்று மூன்று முறை பார்வேட்டை நடைபெறும்.

இவ்விழாவினைக் காண சுற்றுப்புறத்தில் உள்ள கிராமங்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் கூடுவது வழக்கம். சிவனடியார்கள் அவசியம் காண வேண்டிய வைபவம் இது.

### இதர விழாக்கள்

சித்திரை திருவோணம், ஆனி உத்திரம், மார்கழி ஆருத்ரா, ஆவணி, புரட்டாசி, மாசி நவராத்திரி, ஐப்பசி அன்னாபிஷேகம், கார்த்திகை சோமவாரம், தைப்பூசம், பங்குனி உத்திரம், பிரதோஷம், கிருத்திகை என விழாக் களுக்கு பஞ்சமில்லை.

### மாணிக்கவாசகர் விழா

திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார் என்ற பெருமை கொண்ட திருவாசகம் எழுதிய மாணிக்கவாசகருக்கு ஒன்பது நாட்கள் விழா நடைபெறும்.

மேலும் கார்த்திகை தீபத்தன்று 27 நட்சத்திரங்களை மையமாக வைத்து 27 மடக்கு தீபாராதனை நடைபெறுவது இவ்வாலயத்தின் சிறப்புக்கள்.

### குதிரைச் சொக்கர் - காரைக்கால் அம்மையார்

இவ்வாலயத்தில் நரியைப் பரியாக்கி திருவிளையாடல் புரிந்த குதிரைச் சொக்கர் சிலையும், பேய் வடிவம் கொண்ட காரைக்கால் அம்மையாரின் சிலையும் பஞ்சலோகத்தால் ஆன அபூர்வ படைப்புக்கள் ஆகும். பாண்டிய மன்னன் திருப்பணி செய்த ஆலயம் என்பதால் சொக்கநாதருக்கு விழா நடந்திருக்க கூடும். அதன் சான்றாக குதிரைச் சொக்கர் சிலை இங்குள்ளது என உணர முடிகிறது.

### சுந்தராஜ பெருமாள் திருக்கோயில்

சிவாலயத்தின் தென்மேற்கே சுந்தரராஜ பெருமாள் திருக்கோயில் அமைந்துள்ளது. இரண்டுமே சமகாலத்தவை. இவை இரண்டுக்கும் ஒன்றாக எழிலான திருக்குளம் அமைந்துள்ளது.

### செல்லும் வழி

திருமணம் என்பது ஊராட்சியாக திகழ்ந்தாலும், இதன் வழக்கில் அறியப்படுவது சித்துக்காடு என்ற பெயரே. எனவே சித்துக்காடு செல்ல வேண்டும் என்றால்தான் வழி கிடைக்கும்.

திருமணம் எனப்படும் சித்துக்காடு சென்னைக்கு மேற்கே 30 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

பஸ் மார்க்கம் வர விரும்புவோர் பூந்தமல்லி- தண்டரை வழித்தட எண்.54 என்ற பேருந்தில் வந்து சித்துக்காடு எனக் கேட்டு இறங்க வேண்டும்.

சொந்த வாகனத்தில் வர விரும்புவோர் திருமழிசைஅல்லது வெள்ளவேடு வந்தும் வரலாம்.



இரயில் மார்க்கம் வர விரும்புவோர் பட்டாபிராம் ரயில் நிலையத்தில் இறங்கி (சென்னை சென்ட்ரல் - திருவள்ளூர் வழித்தடம்) ஆட்டோ மூலம் தெற்கு நோக்கி 4 கி.மீ. பயணம் செய்தால் சித்துக்காடு வரலாம்.

ஆலய தரிசனம் நேரம்

காலை 7 மணி முதல் காலை 10.30 மணி வரையிலும் மாலை 4.30 மணி முதல் இரவு 7.30 மணி வரையிலும் ஆலயம் திறந்திருக்கும்.

அர்ச்சகரின் வீடு ஆலயத்தின் எதிரிலேயே உள்ளதால் எளிதில் தரிசனம் செய்யும் வாய்ப்பும் உள்ளது.

உலகிலேயே நடராஜருக்கு திருமணம் நடைபெறும் அபூர்வ தலம் இது என்பதால் சிவனடியார்களும், சித்தர்கள் நிறைந்த பூமி என்பதால் ஆன்மீக அன்பர்களும் அவசியம் வருகை தர வேண்டிய தலம் திருமணம் என்கிற சித்துக்காடு.





சென்னை, திருவல்லிக்கேணி, அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலில் – 11.05.07 அன்று நடைபெற்ற அர்ச்சகர் பயிற்சி நிலையத் துவக்க விழாவில் தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை அரசு செயலர் திரு.து.இராசேந்திரன், இ.ஆ.ப. அவர்கள், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர் திரு. த.பிச்சாண்டி, இ.ஆ.ப., அவர்கள், தலைமையிட இணை ஆணையர் திரு.பொ.ஜெயராமன் அவர்கள், சென்னை இணை ஆணையர் திரு.ப.தனபால் அவர்கள் மற்றும் ஆசிரியரும், மாணவர்களும்.

# காரைக்கால் தந்த கனி

தமிழாகரர் தெ.முருகசாமி
புதுச்சேரி.9



'அம்மையே அப்பா' என ஆண்டவனை ஆன்மாக்கள் கொண்டாடினாலும் அந்த ஆண்டவன் தனக்குறிய அம்மையை இம்மண்ணுலகிலிருந்து தேடிக் கொண்டதுதான் வியப்பினும் வியப்பான ஒன்றாகும்.

திருக்கயிலையில் தலையால் நடந்து வந்த எலும்புக் கூட்டைக் கண்ட உமையவள் இறைவனிடம் இவர்யார் என வினவினாள். அதற்கு இறைவன் "வரும் இவள் நம்மைப் பேணும் அம்மைகாண் உமையே!" என்றான். தாயிலியாகிய தனக்கு இவள் அம்மை என்றது புதுமையாக உள்ளது. இங்ஙனம் கூறக் காரணம் என்ன என்பதை நுட்பமாக உணரச்செய்வதே இக்கட்டுரையின் கருதுகோள்.

அறுபத்துமூன்று நாயன்மார்களில் காரைக்கால் அம்மையார், மங்கையர்க்கரசியார், இசைஞானியார், என்ற மூவரும் பெண் அடியார்கள், இவர்களுள் இறைவனைப் பாடிப் பரவியவர் காரைக்காலம்மை ஆவார். காலத்தால் முந்திய அவர்தான் திருநெறிய தமிழை முதன்முதலில் தோற்றுவித்த தாயாக இருப்பதால் தாயிலியாகிய சிவபெருமான் அவரை அம்மை என்றார். தாய்தான் முதன்முதலில் குழந்தைக்குத் தந்தையை உணர்த்துவாள். தந்தை குருவை உணர்த்த குரு இறைவனை உணர்த்துவார். இப்படியாக குழந்தைக்கு இறைவனை உணர்த்த தாயே அடிப்படையானவள் என்பதால், இறைவனை உணர்த்தும் திருமுறையை முதன்முதலில் உணர்த்திக் காட்டிய தாயாக அம்மையார் அமைவதால் அவர் இறைவனின் தாயாக அம்மையார் அமைவதால் அவர் இறைவனின் தாயாவதில் வியப்பொன்றும் இல்லை எனலாம். இத்தகு பெருமையில் காரைக்கால் அம்மையாரின் வரலாறு பல உள்ளடக்கங்களைக் கொண்டதாக இருப்பதை இனிக் காண்போமாக!


தனவணிகர் குலத்தால் புகழ் பெற்ற காரைக்காலில் வாழ்ந்த தனதத்தன் என்பவரின் ஒரே மகளாகப் புனிதவதியார் என்பவர் அவதாரம் செய்தார். தனம் சேர்வது தானம் செய்வதற்கே என்ற நியதிப்படி, தந்தை செய்த தானத்தின் பலன் ஒன்று திரண்ட புண்ணியமாகப் புனிதவதியார் வளர்ந்து வந்தார். அழகு சௌந்தர்யமாக இருந்த அவர் பேரழகு மிக்க இலக்குமிபோல் காணப்பட்டதாகச் சேக்கிழார் கூறினார். பேர் சொல்ல ஒரு பிள்ளை என்பதற்கேற்பத் தந்தையின் குலம் விளங்க அவதரித்ததாகவும் சேக்கிழார் சிறப்பித்தார்.

பெற்றோர் உற்றோர்களின் நல்ல வளர்ப்பால் சிவபக்தியுடன் வளர்ந்த புனிதவதியார் மணப்பருவம் எய்தியதால் இவருக்கு மணம் முடிக்க அனைவரும் திட்டமிட்டனர். அருகிலுள்ள நகரமான நாகப்பட்டினத்துப் பெருஞ்செல்வர் நீதிபதி என்பவரின் மகன் பரமதத்தன் என்பவனுக்குப் புனிதவதியாரை மணம் பேசி வைதிக முறைப்படி மணம் முடித்தனர். மணவறையில் இருந்த தம்பதியரைச் சேக்கிழார் "மயிலைக் காளைக்குக் கலியாணம் செய்தார்கள்" என்றார்.

ஈண்டு மயிலையையும், காளையையும் உவமை கூறியது சிந்திக்கத் தக்கது. கருமையான விரிந்த குடையைக் கண்டால் காளைமாடு மிரளும். அது போலக் கருநிறமயிலான புனிதவதியைக் கண்டு பரமதத்தன் மிரளப் போகிறான் என்ற பின் வரலாற்றின் உண்மை உவமையால் இம்மணம் பொருந்தாமணம் என்பதைச் சேக்கிழார் சுட்டினார் எனலாம். பெண் மயிலை ஆண் மயிலோடும் பசுவைக் காளையோடும் மணம் செய்விக்கலாம். ஆனால் பறவையும் விலங்குமாகிய மயிலையும் காளையையும் இணைப்பது பொருத்தமின்மையேயாகும். தனித்தனியே மயிலைப் பெண்ணுக்கும் காளையை ஆணுக்கும் உவமை கூறலாம். திருமணமாகும் நிலையில் பறவையையும் விலங்கையும் சேர்த்துக் கூறியது பொருத்தமின்மையேயாம்.

மேலும் மயில் நடக்கும் தோகை

விரித்தாடும், மேலே பறக்கும். ஆனால் காளையோ நடக்க மட்டுமே செய்யும். இதற்கேற்ப இல்லற வாழ்விலும் ஆன்மீக வாழ்விலும் புனிதவதியார் சிறந்து விளங்க இறைவனாகிய பரமதத்தனோ ஆன்மீக நெறியை இழந்தவராக இல்லறத்தில் மட்டுமே விளங்கினான். இருவரது பெயர்களும் பொருத்தமாகவே அமைந்தன. இரு நெறியிலும் புனிதம் பெற்றதால் மணமகள் புனிதவதியாகத் திகழ்ந்தார். ஆன்மீக நெறிக்கு அப்பாற்பட்டதாக இருந்ததால் பரமனைத் தத்தம் செய்த பொருத்தத்தில் பரமதத்தனாகக் கணவர் இருந்தார்.



இவ்வாறே இன்னொன்றையும் சிந்திக்கலாம். பிள்ளையைப் பெறுதல் அல்லது ஈனுதல் என்பது தாய்க்குறியது. தந்தையை அங்ஙனம் கூறுவதில்லை. ஆனாலும் சேக்கிழார் புனிதவதியாரின் தாய் பற்றி ஏதும் கூறாமல் தந்தை பயந்த மகள் என்கிறார். இதுபோலவே பரமதத்தனையும் நீதிபதி பயந்த மகன் என்றே கூறினார். இதனால் புனிதவதியாரின் வாழ்வு தொடக்க முதல் இறுதி வரை முரண்பாடுடையதாகவே இருக்கும் என்ற குறிப்பு பெறப்படுகிறது. இந்நிலையில் இரு குடும்பத்தாரும் மனம் ஒத்து திருமணம் நடத்தினாலும் அம்மணம் புனிதவதியார்க்கும் பரமதத்தனுக்கும் பொருத்தமாக அமையவில்லை என்பதே உண்மையாகி விட்டது எனலாம்.

புனிதவதியார் தனக்கு ஒரே மகள் என்பதால் அவரை விட்டுப்பிரிய மனம் .இல்லாத தந்தை தனதத்தன், மகளைக் காரைக்காலிலேயே கணவருடன் வாழ்ந்திருக்க ஏற்பாடு செய்தார். பரமதத்தன் தன்குலமரபின்படிக் காரைக்காலில் வாணிபம் செய்து வந்தான். வாணிபநிமித்தமாகப் பார்க்க வந்தவர்கள் தந்த இரண்டு மாம்பழங்களை வீட்டுக்கு அனுப்பி வைத்தான். இந்நிலையில் உணவு உண்ணும் வேட்கையில் சிவனடியார் ஒருவர் இல்லத்திற்கு வந்தார். அடியாருக்கு அன்னமிடுதலைக் கடமையாகக் கொண்டிருந்த புனிதவதியார், கறிகள் செய்யப்படாத நிலையிலும் முன்னர் சமைத்திருந்த சோற்றினை மாம்பழத்துடன் பரிமாறி அடியாரின் பசி தீர்த்தார்.

ஈண்டு கணவன் கொடுத்தனுப்பிய பழத்தை ஓரிரண்டு என்றும், புனிதவதியார் தனியாக இருந்த வீட்டில் அடியார் ஒருவர் வந்ததும் சிந்தனைக்குரிய செய்திகளாகும். ஒப்பற்ற இரண்டு என்பதைக் குறிப்பதற்கு ஓரிரண்டு எனலாம். ஒன்று அடியாருக்கும் மற்றொன்று கணவனுக்குமாகப் பரிமாறப்போவதால் ஒப்பற்ற இரண்டு என்பதைச் சிறப்பாகக் கருதலாம். ஆனால் கணவன் ஒரு பழத்தை உண்டதற்குப்பிறகு மற்றொன்றைக் கேட்டதால் கதையின்படி மாம்பழம் மூன்றாகி விடுகின்றது. இப்பொருளுக்கேற்ப ஓர் இரண்டு என்றதை ஒன்றும் இரண்டும் என்பதாக எண்ணிப் பொருளில் இயல்பாகவே மூன்றாகிவிடுகின்றதாகக் கொள்ளலாம். இவ்வுண்மை கணவனுக்குத் தெரியாததால்தான் இன்னுமொரு பழம் உளது. அதனை இடுக என்றான். கதை அமைப்பில் மூன்றாவதாக இன்னொரு பழம் வரப்போகிறது எனத் தெரியாதவராகவே புனிதவதியார் வந்த அடியாருக்கு 'இரண்டில் ஒன்றைக் கொணர்ந்து' படைத்தாகச் சேக்கிழார் கூறினார். எனவே கதையில் மூன்று மாம்பழங்கள் உள்ளன என்றதன் அதிசயத்தை உணர்த்த வேண்டியே பரமதத்தனுக்கு வியாபாரிகள் ஓரிரண்டு மாம்பழத்தைத் தந்ததாகக் கூறப்பட்டது.


ஈண்டு வியாபாரிகள் தந்த பழங்கள் இரண்டு ஒன்றாகி, அந்த ஒன்று ஆண்டவன் தந்ததால் இரண்டாயிற்று. இதனால் மூன்றான பழங்கள் நான்காகும் அதிசயத்தைச்

சேக்கிழாரின் செஞ்சொற்கள் காட்டுகின்றன. ஈசனது அருளால் மாம்பழம் வந்தது என்ற மனைவியிடம் அது உண்மையானால் "இன்னும் ஓர் ஆசில்கனி அவனருளால் அழைத்தளிப்பாய்" என்றான் கணவன். ஓர் ஆசில் கனி என்றது ஒரு மாம்பழத்தைக் குறிக்குமாயினும் ஒப்பற்ற என்ற பொருளையும் உள்ளடக்கமாகக் கொண்டது என்பதும் உண்மையே. கணவன் மெய்யென உணருமாறு செய்ய நான்காவதாக வந்த பழமேகாரணமாக இருந்ததால் 'ஓர்' எனப்பட்டது. எனவே கதைப் போக்கிற்கேற்ப சேக்கிழார் ஆடிய சொற்சிலம்பத்தை என்னென்பது!

சிறுத்தொண்டர் வரலாற்றில் வந்த அடியவர் பெண்கள் தனித்திருக்கும் இல்லத்தில் யாம் நுழையோம் என்பதாகக் கூறும் சேக்கிழார், புனிதவதியார் புராணத்தில் தனித்தவர் இல்லத்தில் அடியார் நுழைந்து தங்குவதாக கூறுவது முரண்போலிருப்பினும் முரணில்லை எனத் தெளிய வேண்டும். எவ்வாறெனில் புனிதவதியாரின் இல்லிற்கு வந்தவர் உண்மை அடியார் என்பதால் கள்ளங்கபடமற்று நுழைந்தார். சிறுத்தொண்டர் வீட்டுக்கு வந்தவர் ஆண்டவனே அடியாராக வந்த போலியானவர். போலியாய் வாழ்வோர் நடிப்பர் என்பதால் அங்ஙனம் கூறி நுழையாமல் (தங்காமல்) சென்றார் என்ற உலகியலை உணர்த்த சேக்கிழார் இருவேறு வகையாகக் கூறினார். இப்படிச் சொல்லாடலாலும் நிகழ்ச்சியாலும் புனிதவதியார் வரலாறு சிகரந்தொட்ட சாதனை ஆகப் போகிறது என்ற குறிப்பைச் சேக்கிழார் உணர்த்தினார் எனலாம்.

இங்ஙனம் புனிதவதியாருக்கு நற்பேறு கிட்டும் விதமாக வந்த அடியார் உணவு உண்டு சென்றதும் உச்சிப்போதில் கணவன் வீடு வந்ததும் எஞ்சிய மாம்பழத்தோடு உணவு பரிமாறினார் மனைவி. மாம்பழத்தின் மட்டல்லாச்சுவையை உணர்த்த கணவன் மனைவிக்கு வேண்டுமே என எண்ணாமல் மற்றொரு மாம்பழத்தைத் தருமாறு கேட்க, தர்மசங்கடத்திற்கு ஆளான புனிதவதியார் மயங்கினார், நம்பினோர் கெடுவதில்லை என்ற நியதிப்படி இறையருளை வேண்டினார். அதிமதுரக்கனி ஒன்று அம்மையார் கையில்







திருவண்ணாமலை, அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயிலில்– 11.05.07 அன்று நடைபெற்ற அர்ச்சகர் பயிற்சி நிலையத் துவக்க விழாவில் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் திரு.சத்தியபிரதா சாஹூ, இ.ஆ.ப., அவர்கள், விழுப்புரம் மண்டல இணை ஆணையர் திரு.இரா.சுப்பிரமணியம் அவர்கள், அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயில் அறங்காவலர் குழுத்தலைவர் திரு.வ.தனுசு அவர்கள், மற்றும் அறங்காவலர் திருமதி. ஆ.பானுமதி அருணகிரி, துணை ஆணையர்/ செயல் அலுவலர் திரு.எஸ்.வாசுநாதன் அவர்கள் மற்றும் ஆன்றோர்களும், சான்றோர்களும், பயிற்சிக் கூடத்தில் ஆசிரியரும், மாணவர்களும்

வந்து சேர்ந்தது. கணவனுக்கு ஆர்வமுடன் அதை அளிக்க அவன் முன் உண்ட கனியினும் சுவை வேறுபட்டதாக இருப்பதால் இதனை எங்கு பெற்றாய்? என வினவினான். தாம் முன்னர் அனுப்பி வைத்த இரண்டில் ஒன்று தானே என்ற நினைவு இல்லாமல் 'எய்த வரும் கனியளித்தார் யார்?' என வினவியது முரணாய்த் தோன்றினும் அவன் அப்படிக் கேட்டதால் தான் அம்மையாரின் தெய்வத்திறம் பாரறியச் செய்ய அடிப்படையானது.

இந்நிலையில் மனைவி, திருவருளால் கிட்டியது என ஒளிவுமறைவின்றி கூறக் கணவன் இச்செயல் ஈசனருளாயின் மற்றுமோர் ஆசில்கனி தருக என்றபடி அம்மையார் இறைவனிடம் அழுது அரற்றி மற்றுமோர் கனியைப் பெற்றுக் கணவனாரிடம் கொடுத்தார். கண்ணால் கண்ட அளவிலும் கையால் வாங்கிய அளவிலும் காட்சிப் பொருளாக இருந்த மாம்பழம் உடனே மாயமாய் மறைந்துவிட்டது.

இவ்வற்புதத்தைக் கண்ட கணவன் மனந்தடுமாறினான். இவள் மனைவி அல்லள் பெண் தெய்வம் என எண்ணி இவள் தனக்குப் பணி செய்ய இவளுடன் வாழ்தல் தகாதென எண்ணினான். விட்டுப்பிரிய எண்ணியதற்கேற்பக் கணவன் கடல் வாணிபம் செய்யப்புறப்பட்டு, திரவியம் தேடிக் கொண்டு காரைக்கால் வாராமல் மதுரையம்பதி சென்று மறுமணம் செய்து வாழ்க்கையைத் தொடங்கினான். தன்வாரிசாகப் பிறந்த பெண் குழந்தைக்குப் புனிதவதி எனப் பெயரிட்டு மகிழ்ந்தான். இஃதறிந்த சுற்றத்தார் மூலம் மதுரை சென்ற புனிதவதியாரைப் பார்த்த கணவன் அஞ்சி நடுங்கி மனைவியைத் தெய்வமாய்க் கருதி வணங்கினான். இவர் மானுடப் பெண் அல்லர், தெய்வப்பெண் எனக் கணவன் யாவர்க்கும் உணர்த்திய அளவில் கண்ட புனிதவதியார் கணவனுக்காகத் தாங்கியிருந்த அழகிய உடலை வெறுத்து பலரும் கண்டு அஞ்சும் பேய் உருவை இறைவனிடம் வேண்டிப்பெற்றார். இப்பேய் உருவம் எல்லோராலும் வெறுக்கத்தக்கதாக இருந்தாலும் அம்மையாரைப் பொறுத்தமட்டில் சிவபெருமானை விட்டுப்பிரியா பதினெண் கணத்தவருள் ஒருவராகப் போற்றப்படும் சிறப்புற்றார். இந்நிலையில் அழகு மயிலாக இருந்தவர் அழகில்லாக் கருங்குயிலாக மாறிவிட்டார். அதாவது மயிலாக இருந்து இல்லறத்தில் வாழ்ந்தவர் ஆன்மீகத்தில் குயிலாகக் கூவத் தொடங்கினார். அதன் அடையாளமே அவர் பாடிய அற்புதத் திருவந்தாதியும், திருவிரட்டை மணிமாலையும் ஆகும்.

இங்ஙனம் குயிலாய்க் கூவியவராய்த் தன் மனோ வேகத்தில் காலால் நடந்தே கயிலை ஏகினார். நடை தளர்ந்ததால் தலையால் நடந்தார். இதனால் ஊன் உடம்பில் இறைவனை வணங்குவதினும் தலையாய ஞானத்தால் அறிந்து வணங்குதலே சிறந்தது என மெய்ப்பித்தார் எனலாம். இந்நிலையில் எலும்புக் கூடாய் கயிலை ஏறிவரும் அம்மையைக் கண்ட உமாதேவியார் இறைவனிடம் 'தலையினால் நடந்தேறும் இவர் யார்' என வினவ, இறைவனும் "இங்கு வரும் இவள் நம்மைப்பேணும் அம்மைகாண்" உமையே! என்றான், தாயுமிலி தந்தையிலி தான் தனியனாம் இறைவன் தன்னைத் தேடி வந்த தாயை அம்மையே என்று வாய் மணக்க அழைத்தான். அம்மையாரும் தாய் குழந்தையைச் செல்லமாகக் கூப்பிடுமாறு அப்பா எனக் கூறிப்பாதம் பணிந்தார். அம்மையே நம்பால் வேண்டுவது யாது என்றான் இறைவன்.

"பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும்
வேண்டுநான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும்போதுன் அடியின் கீழ்
இருக்க" என்றார்

எனச் சேக்கிழார் அம்மையின் இறவா இன்ப அன்பைப் புலப்படுத்தினார்.

அம்மையார் வேண்டியவாறு வரமளித்த இறைவன் 'தொண்டை நாட்டில் திருவாலங்காட்டில் நாம் ஆடும் திருநடனம் கண்டு எப்போதும் பாடிக் கொண்டிருப்பீர்' என அருள் புரிந்த வண்ணம் திருவாலங்காடு சென்று எம்பிரானின் ஊர்த்தவத் தாண்டவத்தைக் கண்டு மகிழ்ந்து மூத்த திருப்பதிகம் பாடி மகிழ்ந்து பேறுபெற்றார்.

இறைவன் அம்மையே என்றதால் காரைக்காலில் பிறந்த புனிதவதியார் காரைக்கால் அம்மையார் எனப்பட்டார். இப்பெருமைக்கேற்ப அறுபத்துமூவரில் இவர் ஒருவரே அமர்ந்த கோலத்தினராய் திருக்கோயில்களில் வடிவமைக்கப் பெற்றார்.

ஒரு நெல் நூறு நெல்லை உருவாக்கும் என்பர். அது போல ஒரு பழத்தின் விதை மரமாகிப் பலபழங்களை உருவாக்கும். விதையில்லாத பழத்தால் பயன் குறைவேயாம். அம்மையார் மாம்பழத்தால் பேறுபெற்றார். பிறரையும் பேறு பெறச் செய்தார். எவ்வாறெனில், சமயக்குரவர் நால்வர்க்கும் அம்மையார் முந்தியவறாகத் தோன்றி திருநெறிய தமிழைத் தோற்றுவித்தார். அற்புதத் திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை, மூத்த திருப்பதிகம் என மூன்றைப் பாடிய அமைப்பே பின்னாளில் திருஞானசம்பந்தருக்கு வழிகாட்டியாக இருந்தது. பத்து பாடல்களைக் கொண்டதற்குப் பதிகம் என்று பெயர். ஆனால் அம்மையார் பதினோர் பாடல் பாடினார். பதினோராம் பாடலில் பாடினோர் பெயர், பாடினால் பெறும் பயன் கூறும் திருக்கடைக்காப்பாக இருந்த குறிப்புதான் சம்பந்தருக்கு உதவியாக இருந்தது. மேலும் அம்மையாரின் பண் அமைப்பும் ஞானசம்பந்தரால் மேற்கொள்ளப்பட்டன.


எனவே சைவம் கால் பதித்து வளரக் காரைக்காலம்மை எனும் தமிழ்த்தீங்கனியே காரணம் என்பதால் உலகியலுக்கேற்ப அவர் விருந்தில் மாங்கனி தந்த குறிப்பென்பது நாச்சுவைக்கானததைக் குறிக்க அன்று. இருந்தமிழாம் சைவத்தை நிலைநாட்டப் பரிமாறிய பாச்சுவையான திருமுறைக்கனியைக் குறிக்க என்பதே உண்மை. இந்த வகையில் அம்மையாரைக் காரைக்கால் தந்த கனி என்றாலும் அவர் சைவச் சீரைக் கால்பதிக்கச் செய்ததால் அவரைத் "தெய்வத் தமிழ்த் தேமாங்கனி" என்றால் அது பொருந்தும் எனலாம்.





திருவரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலில் 11.05.07 அன்று நடைபெற்ற அர்ச்சகர் பயிற்சி நிலையத் துவக்க விழாவில், திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் திரு. ஆஷிஷ் வச்சானி, இ.ஆ.ப, அவர்கள், திருவரங்கம், ஸ்ரீ ரங்கநாராயண ஜீயர் சுவாமிகள், திருச்சிராப்பள்ளி மண்டல இணை ஆணையர் திருஎம்.கே. பாலசுப்பிரமணியம் அவர்கள், அறங்காவலர் குழு தலைவர் திரு.எம். வெங்கடாசலம், அறங்காவலர்கள் கிரிஜா மோகன், தி.ரா. முரளி, சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் துணை ஆணையர்/ செயல் அலுவலர் திருபிஆர்அசோக் ஆகியோர்.

# வரகூர் தலப் பெருமையும், அங்கு வீற்றிருக்கும் தெய்வத்தின் மகிமையும்



**வரகூர் கிராமம்:**

தென்னிந்தியாவின் "நெற்களஞ்சியம்" என்று போற்றப்படும் தஞ்சாவூர் ஜில்லாவில், தஞ்சாவூர் நகரிலிருந்து மேற்கே 25 கி.மீ. தூரத்திலும், திருவையாற்றிலிருந்து 15 கி.மீ தொலைவிலும் குடமுருட்டி ஆற்றங்கரையின் தென் பகுதியில் பூபதிராஜபுரம் என்ற பழமையான பெயர் கொண்ட கிராமம்தான் வராஉறபுரி என்று பெயர் பெற்ற வரகூர் கிராமம் ஆகும்.

17-ம் நூற்றாண்டில் பூபதிராஜபுரம் என்ற வரகூர் கிராமம் தஞ்சையை ஆண்ட நாயக்க மன்னர்கள் காலத்தில் பிரசித்தி பெற்றிருந்தாலும் ராஜ ராஜ சோழன் காலத்தில் 11-ம் நூற்றாண்டின் முன் பகுதியில் ராஜேந்திர சிம்ம வளநாடு என்ற பெரிய பிரிவின் கீழ் இருந்த குருக்கை நாடு என்ற பகுதியில் இருந்ததாக தஞ்சாவூர் பெரிய கோவிலில் உள்ள கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கிராமம் ஓராயிரம் ஆண்டு சரித்திர வரலாறு பெற்றது.

கண்ணபிரானின் அருள் விளையாட்டில், உள்ளத்தைப் பறிகொடுத்த ஸ்ரீ நாராயண தீர்த்தர், 'ஸ்ரீ கிருஷ்ண லீலா தரங்கிணி' என்ற அரிய அபிநய கிரந்தத்தை, வரகூர் கோயிலின் திருச்சந்நிதியிலேயே இயற்றினார். கண்ணபிரானின் திவ்ய காட்சிகளை மனத்திரையில் காணுற்று அவர் அந்நூலைப் பாடியுள்ளார்.


**கோவில்கள்:**

இவ்வூரில் எழுந்தருளியிருக்கும் பெருமாள் கோயிலில், இடது துடையில் லஷ்மி தேவியுடன், அமர்ந்த நிலையில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள மூலவரின் பெயர் ஸ்ரீ லெட்சுமி நாராயணர். உத்ஸவர் ஸ்ரீ வேங்கடேச பெருமாள், ஸ்ரீதேவி ஸ்ரீபூமிதேவியுடன் காட்சி அளிக்கிறார்.

சிவன் கோயில் மூலவர் லிங்க ரூபத்திலிருக்கும் ஸ்ரீ மஉறா கைலாசநாதர் ஆவார். அம்பாளின் பெயர் ஸ்ரீ ஆனந்த வல்லி. இவர்கள் இருவருக்கும் தனித்தனியாக சன்னதிகள் உள்ளன. மேலும் ஸ்ரீ வினாயகர், ஸ்ரீ சுப்ரமணியர், ஸ்ரீ துர்க்கை, நவகிரகங்கள் சன்னதிகள் தனித்தனியாக உள்ளன. இங்குள்ள சிவன்/பெருமாள் கோயில்கள் சுமார் 500 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

வரகூர் பெருமாள்:

வரகூர் பெருமாளின் பெருமையும் மஉறிமையையும் பக்தர்களுக்கு வெளிக்கொண்டு வந்த பெருமை 17-ம் நூற்றாண்டு தொடக்கத்தில் வாழ்ந்த ஸ்ரீ நாராயண தீர்த்தர் என்ற யதியை சாரும். ஆந்திர நாட்டில் தோன்றிய இவர் சிறுவயதில் வேதங்களை நன்கு கற்றுணர்ந்து தக்க வயதில் துறவை மேற்கொண்டார். திருப்பதியில் தங்கியிருக்கும் காலத்தில் இவருக்கு தெற்கு நோக்கி செல்ல வேண்டுமென்ற எண்ணத்தில் புறப்பட்டு வரகூரிலிருந்து 5 கி.மீ தொலைவில் உள்ள நடுக்காவேரி என்ற ஊரை அடைந்தார். ஆனால் அதற்கு முன்பே இவருக்கு வயிற்ற



ஸ்ரீ நாராயண தீர்த்தர்

நோய் உண்டாகி அதனால் தீராத வேதனைக்கு உள்ளானார். நடுக்காவேரியில் பிள்ளையார் கோயிலில் தங்கியிருக்கும் காலத்தில் அவருடைய கனவில் பகவான் தோன்றி "தூங்கி எழுந்தவுடன் காணும் மிருகத்தின்பின் தொடர்ந்து செல்லவும்" என்ற ஆணையை பிறப்பித்தார். மறுநாள் விழித்தவுடன் தனக்குமுன் தோன்றிய வெள்ளை நிற வராஉறத்தை பின்தொடர்ந்து செல்ல அது வரகூர் பெருமாள் கோயிலில் சென்று மறைந்ததாம். வரகூர் பெருமாளே தன்னை இவ்விடம் கொண்டு சேர்த்தார் என்ற எண்ணத்துடன் வரகூரிலேயே அம் மகான் தங்கி பெருமாளையே பரப்பிரம்மமாய், ஸ்ரீ யசோதை கிருஷ்ணனாய் வழிபடத் தொடங்கினார். அப்பொழுது அவரது வயிற்று நோவும் தீர்ந்தது. பிறகு மூலவர் சன்னதியில் 'கீதகோவிந்தம்' என்ற காவ்யத்திற்கு ஒப்பான "ஸ்ரீ கிருஷ்ண லீலா தரங்கிணி " என்ற பெரும் காவிய கீதத்தை சுத்த சமஸ்கிருதத்தில் பாடி முடித்தார். அவர் பாடிய பாட்டிற்கும் லயத்திற்கும் ஏற்றவாறு பெருமாள் ஸ்ரீ கிருஷ்ணராகவே மாறி காலில் சலங்கையுடன் திரையின் பின்னால் நடனமாடினார் என்றும், பெருமாள் கோயில் அர்த்த மண்டபத்தின் தூணில் வீற்றிருக்கும் ஸ்ரீ ஆஞ்சநேயர், பெருமாளின் நடனத்திற்கு தாளம் போட்டார் என்பதும் ஐதீகம். பிறகு ஒரு சமயம் சலங்கை ஒலி நின்றவுடன் ஸ்ரீ நாராயண தீர்த்தர் அந்த கீதத்தை முடித்தார் என்பதும் வரலாறாகும். குருவாயூர் ஸ்ரீ கிருஷ்ணன் கோயிலில் "ஸ்ரீ நாராயண பட்டத்ரி அருளிய "நாராயணீயம்" பாடல்கள் போல், ஸ்ரீ கிருஷ்ண லீலா தரங்கிணியின் பாடல்கள் பகவான் ஸ்ரீ கிருஷ்ணரால் அங்கீகரிக்கப் பட்டவையாகும். அதனால்தான் வரகூர் பெருமாள் கோயிலில் கோகுலாஷ்டமி உத்ஸவம் உறியடி என்ற பெயரில் பல காலங்களாக விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. உறியடி அன்று வரகூர் கோகுலமாகவும், அக்ரஉறாரத்திலுள்ள அந்தணர்கள் கோபியர்களாகவும், பெருமாள் கோபாலனாகவும் தோற்றமளிக்கிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. வரகூர் உறியடி உத்ஸவத்தை நேரில் பார்த்து அனுபவித்தவர்கள் மேற்சொன்ன கருத்தின் உண்மையை உணருவார்கள். ஸ்ரீ நாராயண தீர்த்தர் சரிதம் அவர் ஸமாதி அடைந்த தலத்தை பற்றிய ஆராய்ச்சி கட்டுரை இவ்விவரங்களை "வரகூர் ஸ்தல வரலாறு மற்றும் ஸ்ரீ நாராயண தீர்த்தர் சரித்திரம்" என்ற நூலில் காணலாம்.

**கிருஷ்ணலீலா தரங்கிணி:**

வடமொழியில் தரங்கிணி என்ற சொல் ஒரு நதியின் அலைகளைக் குறிக்கும். இக் காவிய அமைப்பில் 12 தரங்கங்களும், 153 சிறியதும் பெரியதுமான பாட்டுக்களும், 302 ஸ்லோகங்களும் 31 சூர்ணிகைகளும் உள்ளன. ஸ்ரீ கிருஷ்ணனின் பால லீலைகள் அலைகளாக வந்து பக்தர்களின் உள்ளங்களை மோதி பரவசப்படுத்துவதால் இது கிருஷ்ண லீலா தரங்கிணி என்ற பெயர் பெற்றதாகக் கொள்ளலாம். இந்நூல் ஸ்ரீமத் பாகவதம் 10-வது ஸ்கந்தம் 1 முதல் 58 வரை உள்ள அத்யாயங்களில் கூறப்பட்டுள்ள ஸ்ரீ கிருஷ்ணனின் பிறப்பு முதல், அவருடைய பல பால லீலைகளைக் கூறுகிறது. முக்கியமாக ஸ்ரீ கிருஷ்ணனின் அவதாரம், பால லீலைகள், கன்றுகளையும், பசுக்களையும் மேய்த்தல், கோபி வஸ்திராபஉறரணம், கோவர்த்தனமலையை தூக்குதல், ராஸக்கீரீடை, கம்சன் முதலிய அசுரர்களை அழித்தல், கடலின் நடுவே

துவாரகையை அடைந்து அதில் பிரவேசித்தல், ஸ்ரீ பலராமன் விவாஹம், ஸ்ரீ கிருஷ்ணர் ருக்மிணி கல்யாணம் மற்றும் ஜாம்பவதி, சத்யபாமா முதலிய எட்டு பட்டமஹிஷிகளின் விவாஹம் இவைகள் விளக்கமாக பாடப்பட்டுள்ளன. ஒவ்வொரு தரங்கத்திலும் வரும் லீலைகளின் பாத்திரங்களின் பெயர்களை கூறியபின், ஸ்லோகம், கீதம் சூர்ணிகை இவற்றால் அந்த அந்த லீலைகள் விளக்கி கூறப்பட்டுள்ளன.பக்தர்கள் சபையில் அங்கீகரிக்கப்பட்ட மேடையில் தேர்ச்சி பெற்ற நடிகர்களால் கிருஷ்ணனின் லீலைகள் அபிநயம் செய்யத் தக்கவாறு இக்காவிய கீதம் உள்ளதாக இக் கீதத்தை கற்று அறிந்தவர்கள் கூறுகிறார்கள். இன்றும் வரகூர் பெருமாள் கோயிலில் ஸ்வாமி புறப்பாடும் மற்றும் நிவேதனம் செய்தல் முதலியவைகள் பஜனை முறையிலேயே அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. "ஸ்ரீ கிருஷ்ணலீலா தரங்கிணி"யில் பாடப்பெற்ற பாடல்களை வரஹூர் ஆடிட்டர் வைத்திஸ்வர அய்யரின் குடும்பத்தினர் நூலாக வெளியிட்டுள்ளனர். நூல் கிடைக்குமிடம் ஆடிட்டர் வி.வி.மணி, பு.எண்.50, ப.எண்.107, ராமசாமி தெரு, மண்ணடி, சென்னை 600 001 போன் 044 2524408.

திருவிழாக்கள்:

1. இத்திருக்கோயில் விழாக்களில் மிகவும் சிறந்ததாகக் கருதப்படும் உறியடி விழா ஒவ்வொரு வருடமும் ஆவணி மாதம் காயத்ரி ஜபம் அன்றைய தினத்திலிருந்து தொடங்கி கோகுலாஷ்டமிக்கு மறுநாள்வரை கொண்டாடப்படும். உறியடிக்கு மறுநாள் ஸ்ரீ ருக்மிணி கல்யாணம், முத்துகுத்தல் 12-வது தரங்கத்தில் வைஷிம்யா என்ற 152-ம் ஸ்லோகத்தின் வர்ணனைக்கு ஏற்ப அனுஷ்டிக்கப்படுகிறது. உறியடி விழாவில் கோகுலாஷ்டமிக்கு முதல்நாள் வரை திருவிழா ஆரம்பத்திலிருந்து இரவு பஜனை, பிறகு திவ்யநாம சங்கீர்த்தனம் எல்லா நாட்களிலும் நள்ளிரவிற்கு பின்னும் நடக்கும். கோகுலாஷ்டமி அன்று இரவு 12.00 மணிக்கு கிருஷ்ண ஜனன விழா கொண்டாடப்படும்.

2. ஸ்ரீ ராம நவமி விழா பங்குனி/சித்திரை மாத சுக்ல பட்ச நவமியிலிருந்து 10 நாட்கள் கொண்டாடப்படும். காலையில் பெருமாளுக்கு தினமும் அபிஷேகம், இரவில் பஜனையும், திவ்ய நாம சங்கீர்த்தனமும், நாள்தோறும் நள்ளிரவு வரை செய்யப்படும். விழாவில் சீதா கல்யாணமும் கடைசி நாள் அன்று பக்த விழாவும் நடைபெறும்.

சிவன்கோயிலில் நவராத்திர விழாவும், ஸ்கந்த ஷஷ்டி விழாவும் ஒவ்வொரு வருடமும் கொண்டாடப்படுகிறது.

பக்தர்களுக்கு தங்க இடம் மற்றும் சாப்பாடு வசதி:

கோயிலுக்கு சொந்தமான ஒரு வீட்டில் இங்குவரும் பக்தர்களுக்கு தங்குமிடமாக செய்து கொடுக்கப்படுகிறது. முன்கூட்டியே கோயில் அலுவலகத்திற்கு தெரியப்படுத்தினால் பக்தர்களுக்கு அவர்கள் செலவில் சாப்பாடு வசதியும் செய்து தரப்படும்.

ஸ்ரீ நாராயண தீர்த்தர் ஆராதனை:

ஒவ்வொரு வருடமும் மாசி மாதம் சுக்ல பஞ்சமியில் ஆரம்பித்து ஸ்ரீ நாராயண தீர்த்தர் ஆராதனை உத்ஸவம்

4 நாட்களுக்குக் கொண்டாடப்படுகிறது.

கல்யாண உத்ஸவம்:

பக்தர்கள் ஸ்ரீ வேங்கடேச பெருமாளுக்கு கல்யாண உத்ஸவம் செய்து பெருமாளின் ஆசியுடன் தங்கள் குறைகளை நிவர்த்தி செய்து கொள்கிறார்கள். இக்கல்யாண உத்ஸவத்தின் விசேஷ அம்சமாக விளங்குவது 25 மூலிகை திரவியங்களுடன் பட்சணம் மற்றும் பழ வகைகள் இவற்றைக் கொண்டு செய்யப்படும் ஹோமமாகும். முடிவில் வேத மந்திரங்களுடன் பூர்ணாஹுதி செய்யப்படுகிறது.

அனைவரும் வரகூரின் பெருமையை அறிய வேண்டும். எல்லாம் வல்ல ஸ்ரீ மஹா கைலாசநாதர் ஸ்ரீ வேங்கடேசபெருமாள் நீண்ட ஆயுளையும் அழிவற்ற செல்வத்தையும், அவரவர்களின் பல்வேறு வேண்டுகோளினையும் பூர்த்தி செய்து அருள்புரிய வேண்டுகிறோம்.



# வேலும் மயிலும் துணை

## கந்தர் அனுபூதி - தொடர்ச்சி

(பேராசிரியர். டாக்டர் சரஸ்வதி இராமநாதன்)

- சென்ற இதழ் தொடர்ச்சி

மனம் வேறு நாம் வேறு! நம்முடையது தானே மனம்! அருளாளர்கள் தங்கள் மனத்தை அழைத்துச் சில அறிவுரைகளைச் சொல்லிப்பாடுவார்கள். நமக்குத் தான் அந்த அறிவுரைகள். ஏழாம் பாட்டில் 'கெட்டுப் போகின்ற மனமே! உனக்கு உய்வழி சொல்கிறேன் கேள்! என்று அழைக்கிறார் கருணைப் பெருமான் அருணகிரி.

**''கெடுவாய் மனமே! கதிகேள்! கரவாது**

**இடுவாய்! வடிவேல் இறைதாள் நினைவாய்!''**

மனமே உன் தன்மை குரங்கின் தன்மை, கிளைவிட்டுக் கிளை தாவும் குரங்கென, ஒவ்வொரு நினைப்பையும் மாற்றி மாற்றிப் மாற்றித்தாவும், அப்படி அலையாதிருக்க வடிவேல் முருகன் தாளை நினை. எப்படி நினைக்க? எந்த வேளை நினைக்க, எத்தனை முறை நினைக்க என்று கேட்கிறாயா? எப்போதும் நினை, நந்தனார் என்ற திருநாளைப் போவார் நாயனார், தினம் தினம் தில்லை, சிற்றம்பலம், பொன்னம்பலம், அம்பலத்தாடி, குஞ்சிதபாதம், ஆடல் வல்லவன், நடராசன், சிதம்பரம் என்று மூச்சுக்கு மூச்சு அவனையே சிந்தித்து வாழ்ந்தார். வயலில் வேலை செய்தவர், பயிரை நட்டு விட்டு நினைப்பெல்லாம் சிவன் மீதே வைத்திருந்தார்! தில்லைக் கூடத்தனையே, உழுதபோது நாற்று நட்ட போது, நீர் பாய்ச்சியபோது, உரமிட்டபோது களை பறித்தபோது, கதிர் அறுத்தபோது, என்று எப்போதும் நினைத்தார். களை தானே மறைந்து கதிர் கட்டுக் கலம் கண்டது. புண்ணியம்தான்! நினைத்த புண்ணியம் தான்!

**''இருக்கினும் நிற்கும் போதும்**

**இரவு கண் துயிலும் போதும்**

**பொசுக்கென விழிக்கும் போதும்**

**பொருந்து ஊண் துய்க்கும் போதும்**

**முருக்கிதழ்க் கனி வாயரை முயங்கும் போதும்''**

அவனையே எண்ணுவது உண்மையான பக்தி!

'நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்பது என்றார் அபிராமி பட்டர்'

**''வழுக்கி வீழினும் நின்திருப் பெயரல்லால்**

**மற்று நான் அறியேன் மறுமற்றம்''** என்றார் சுந்தரர். அப்படி நினைப்பாயாக! 'இறைதாள் நினைவாக வடிவேலன் தாளை நினைப்பாய். அத்துடன் கரவாது இடுவாய் - இருக்கின்ற பொருளை மறைக்காமல், ஏழைகட்குக் கொடு. அற்றார் அலக்தார், பேணுநர் இல்லோர், பிணியுற்றோர், காணார் இப்படிப் பலருக்கும் கொடு.

**'இரப்பவர்க்கு ஈய வைத்தார்**

**ஈபவர்க்குப் பொருளும் வைத்தார்.**

**கரப்பவர் தங்கட்கெல்லாம்**

**கடுநரகங்கள் வைத்தார்.**

*(அப்பர் - 4-38-10)*

கொடுப்பதற்கு மனம் வேண்டும்,

பொருளும் வேண்டும் இந்த இரண்டும் நம்மிடம் சேர, இறைவன் அருள் வேண்டும்.

**'இல்லை என்போர் இருக்கையிலே**

**இருப்பவர்கள் இல்லை என்பார்'** என்றார் வாலி.

கொடுக்கும் பழக்கம் பிறவிக் குணம். நட்பும் கொடையும் தயையும் பிறவிக்குணம் என்றாள் ஒளவைப்பாட்டி. முருகன் அருளையே சிந்தித்து. நீயும் கருணை மனம் பெற்று, மறைக்காமல் கொடு என்கிறார்.

ஒரு உலோபி. கஞ்சன் இருந்தான். மடி நிறையப் பொருள் இருந்தது. மனம் நிறைய அருள் இல்லையே. இருள் தான் இருந்தது. அந்த ஊரில் ஒரு நற்செயலுக்கு நிதி வசூல் செய்யச்சில நல்லவர்கள் அவனிடம் வந்தனர்.

ஐயா! நீங்கள் பொருளே தர வேண்டாம். ஒரு நாளுக்குக் காட்டி விட்டுத் திரும்பித்தருகிற மாதிரி ஒரு செக் மட்டும் தாருங்கள். என்று வேண்டினர். இவரும் மனமில்லாமல் 1லட்சரூபாய் செக் தந்து நாளை என்னிடம் திருப்பித் தந்துவிட வேண்டும் எனக் கண்டிப்பாகச் சொன்னார். மறுநாள் காலை நடந்த பொதுக் கூட்டத்தில் ஊர்மக்கள் நலத்திற்காக 1 லட்சரூபாய் செக் தந்தவர் என்று அந்த அலோபியை ஊரார் புகழ்ந்து, பாராட்டி, மாலைமரியாதை செய்து புகழ் மழையில் நனைய வைத்து விட்டனர். அந்த இனிய அதிர்ச்சி அந்தக் கஞ்சனை மிகவும் சிந்திக்க வைத்தது. போலித்தனமான செக்கிற்கே இந்தப் புகழா! உண்மையாக நான் கொடை கொடுத்தால் எத்தகைய இன்பம் கிடைக்கும். என்று யோசிக்கலானார். ஊர்ப் பெரியோர் வந்து நன்றி கூறி அந்த ஒரு லட்ச ரூபாய்க் காசோலையைத் திரும்பித் தந்தனர். கஞ்சன் மனம் மாறி ''வேண்டாம், அந்தத் தொகை ஊருக்கே நல்ல காரியங்களுக்குப் பயன்படட்டும். கொடுப்பதில் எத்தனை இன்பம் இருக்கிறது. எவ்வளவு புகழ் வருகிறது என்பது புரிந்தது'' என்றார்.

'ஈத்துவக்கும் இன்பம்' என்று குறள் கூறுவது உண்மை. 'ராக்பெல்லர் பவுண்டேஷன்' என்ற பெரிய அறக்கட்டளை உலகறிந்த ஒன்று. அ து எப்படி ஏற்பட்டதாம் தெரியுமா? ஒரு முறை ராக்பெல்லர் என்ற அமெரிக்கப் பணக்காரர் உடல்நிலை கெட்டுப் போய் மருத்துவ மனையில் சிகிச்சைபெற்றார். முன்னேற்றமே காணவில்லை. ஒரு நண்பர் பேச்சு வாக்கில் ஏதாவது தர்மகாரியத்திற்கு உங்கள் பொருளைக் கொஞ்சம் தாருங்களேன்' என்றார். ராக்பெல்லரும் கொடுத்தார். சிறிது உடல் நலம் தேறிற்று நம்பிக்கை பிறந்தது. மேலும் கொடுத்தார். உயிர் பிழைத்தார். அதன்பின் பெரும் பொருளை அறக்கட்டளையாக வைத்தார். அதுதான் அந்த ராக்பெல்லர் அறக்கட்டளை (ராக்பெல்லர் பவுண்டேஷன்). அதிர்ச்சியால் வந்த கொடைப்பழக்கம் உண்மையான கொடையுள்ளமாயிற்று உன்னுடைய நிழல் உனக்கு ஒதுங்க உதவாது. உன் காசு உன் ஆத்மாவுக்கு ஈடேற்றம் தராது. அதைத் தர்மமாக மாற்று. உலக வாழ்க்கை என்ற வியாபாரத்தில் நாம் போட்டுள்ள முதல் இந்த உடல்தான். கிடைத்த இலாபமே மோட்சம்! இந்த உடலை விடக் குறைந்த மதிப்பு உடைய நாயாக, நரியாகப் பிறந்தால், அது நஷ்டமான வியாபாரம். பிறப்பில்லாது பெற நீசெய்ய வேண்டியது இலாபம். அந்த இலாபம் பெற நீசெய்ய வேண்டியது அறம்.

**''கெடுவாய் மனமே! கதிகேள்! கரவாது**

**இடுவாய், வடிவேல் இறைதாள் நினைவாய்**

**சுடுவாய் நெடுவேதனை தூள் படவே**

**விடுவாய் விடுவாய் வினை யாவையுமே!''**

வினை, அதனால் வரும் வேதனை தூளாக நீ செய்யவேண்டியது அறம், பக்தி. வேதனைகளை விடுவாய் விடுவாய், கரவாது இடுவாய்! இல்லையேல் கெடுவாய்! கெடாமலிக்க வடிவேல் முருகன் தாளினை நினைவாய்.

வாழ்நாளின் குறிக்கோள் அடுத்தொரு பிறப்பு எடுக்காமல் வீடுபேறு பெறுவதாக இருக்க வேண்டும். 'தான்' என்பது சிலருக்கு நினைப்பு! தன் மனைவி, தன் வீடு, தன்மக்கள் என்று சிலர் இருப்பார்கள், தன் சாதியினர், தன் ஊர்க்காரர் தன் கட்சிக்காரர் என்று சிலபேர் எண்ணுவார்கள். என் தாய்நாட்டு மக்கள் என்று மிகச்சிலர் நாட்டுப் பற்று மட்டும் கொண்டிருப்பார்கள். உலகம் வாழ என்று சிலபேர்தான் பிரார்த்தனை செய்வார்கள். குடும்பமே உலகம் என்று வாழ்பவர் உள்ளம் கடுகு உள்ளம். உலகமே நம் குடும்பம் என்று நினைப்பவர் உள்ளம் கடல் போன்ற பரந்த உள்ளம்.

நாடோடிக் குடும்பம் ஒன்றிருந்தது. ஒருவன், அவன் மனைவி, ஒரு குழந்தை, ஒரு எருமை மாடு, ஒரு சிறு மூட்டை இவற்றுடன் காட்டாற்றில் இறங்கிவிட்டான் வெள்ளம் அதிகமாக வந்தது எருமை மாட்டை ஆற்றில் விட்டு விட்டான். மேலும் வெள்ளம் வந்தபோது சிறிது யோசித்தான்.

யாரை விடுவது! மனைவிக்கும் எனக்கும் இளமை இருக்கிறது. கடவுள் அருள் இருந்தால்

ஒரு குழந்தை கிடைக்கும். என்று முடிவு செய்து குழந்தையை விட்டுவிட்டான். மேலேமேலே நீர் பாய்ந்து வந்தது. கையில் காசிருந்தால் எவளாவது ஒருத்தி தன்னை மணக்க வருவாள் என்று துணிந்து மனைவியையும் இப்போது கைவிட்டு விட்டான். அதற்குமேலும் அவனால் மூட்டையைச் (பொருளை) சுமக்க முடியவில்லை. காசு போனால் போகட்டும். என் உயிர் பெரிது என்று தான் மட்டும் நீந்திக் கரை சேர்ந்தான். இது கதையல்ல, தத்துவம். பொருள் மீதுள்ளபற்று. மக்கள் மீதுள்ள பற்று. மனைவி மீதுள்ள பற்று எல்லாம் போனாலும் 'தான்' என்ற அகப் பற்று போகாதே' பாரம் குறைய வேண்டுமானால் பற்றுக் குறைய வேண்டும்.

முருகன் உபதேசம் செய்ததும் எனது தன்னலம் 'நான்' என்ற அகப்பற்றுப் போய் விட்டது. மெய்ப் பொருளை உபதேசித்து உலகப் பொருள்களான பொய்க்கின்ற பொருள் மீது எனக்கிருந்த புறப்பற்றையும் போக்கினாய். 'நான்' என்ற அகங்காரம். 'என்னுடையது' என்ற மமகாரம் இரண்டும் போனது. எந்தப் பொருளும் நிலையில்லை- எந்தச் சுவையும் நிலையில்லை. 'தந்தையார், தாயார், உடன் பிறந்தார், தாரம்ஆர், புத்திரர் ஆர், தாம் தாம் யாரே என்றார் அப்பர் சுவாமி. ஒருவரைச் சில காலம் பிடிக்கிறது. பின் அவரையே பார்க்கவும் பிடிக்கவில்லை. சிரிப்பும் புளிப்பும் சில காலம் பிடிக்கிறது, பின்னர் கசப்பும், காரமும் பிடிக்கிறதே! ஏன்! கால மாற்றத்தால் சுவைமாற்றம் கோலமாற்றம் எல்லாம் தடுமாற்றம்தான்! பற்றுக்களைவிட்டு அன்பை, அருளை விசாலமாக்கிக் கொள்வோம். மற்றவர்களின் துன்பம் கண்டு வருந்துவோம். அவரது துன்பத்தைப் போக்க நம்மை நாமே வருத்திக் கொள்கிறோமே அதுதான் அன்பு. அதுதான் இரக்கம், அதுதான் அருள். அன்பு சிரிப்பிலே இல்லை, கண்ணீரில் தெரியும் என்றது குறள்.

**'அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ்**

**ஆர்வலர் புன்கண்நீர் பூசல் தரும்.**

சீதையும் இராமனும், சித்திர கூடத்தில் சிரித்து விளையாடிய போதினைவிட, பிரிவிலே இலங்கையில் சீதையும் கிட்கிந்தையில் இராமனும் கண்ணீர் வடித்த போது தானே அன்பின் ஆழம் புலப்பட்டது! அதுபோலத் தன்னை வருத்திக் கொண்டு பிறருக்கு உதவும் போது ஆனந்தம் வெளிப்படுகிறது! பாசமயக்கம் பிறப்பைத்தரும். பாசநீக்கம் வீடுபேறுதரும். முருகனும் விருப்பத்தை ஏற்படுத்துபவன் காமனும் விருப்பம் ஏற்படுத்துபவன். முருகனும் அழகன், காமனும் அழகன். காமனால் வரும் மயக்கம் தீர முருகன் தாளைப் பற்றிக் கொள்ள வேண்டும். காமன் சிவனுடைய நெற்றிக் கண்ணால் சுட்டெரிக்கப்பட்டான். அதே நெற்றிக்கண் குமரனைத் தந்தது. காமதகனத்தின் பின் குமாரசம்பவம். (மாரன்) காமத்தை அடக்கிவிட்டால், குமாரன் தெரிவான். அந்த முருகனும் குமாரனே நம் காமம், ஆணவம் இவற்றை அகலச் செய்வான். ஆணவச் சூரனை அறிவு வேலால் மாற்றியவன் அவனே.

**''அமரும் பதிகேள் அகமாம் எனுமிப்**

**பிரம்மம் கெடமெய்ப் பொருள்பேசியவா!**

**குமரன் கிரிராச குமாரி மகன்**

**சமரம் பொருதா னவநா சகனே!'' - (8)**

- தொடரும்





மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் – 11.05.07 அன்று நடைபெற்ற அர்ச்சகர் பயிற்சி நிலையத் துவக்க விழாவில் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.எஸ்.எஸ்.ஜவஹர், இ.ஆ.ப., அவர்கள், இணை அணையர் திரு.ஜி.இராஜநாயகம் அவர்கள், அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் அறங்காவலர் திரு.எம்.பாலசுப்பிரமணியம் அவர்கள் மற்றும் ஆன்றோர்களும், சான்றோர்களும்.

கொடிய, கேவலமானதாகக் கருதப்படும் வறுமை நிலையிலும் பிறர்க்கு உணவளித்து விருந்தோம்புகிற அறத்திலிருந்து பிறழாமல் சிவனடியார்களுக்கு அமுதளித்து வாழ்ந்த இளையான்குடிமாற நாயனாரின் ஆன்மீக வாழ்க்கையிலிருந்து ஒரு சோறு பதம் எடுத்துக் காட்டி சேக்கிழார் பெருமான் புகழ்ந்துரைத்த 'வறுமைப்பதம்' பற்றிய கட்டுரை அற்புதம். இப்படிப்பட்ட வறுமையும் பெருமைக்குரியதே என உணர வைத்தது!

த. சத்தியநாராயணன், அயன்புரம்

இறைமுருகன் படைத்திருந்த அறுபடை வீட்டு முருகன் பற்றிய ஆன்மீகக் கவிதை (வருவோர்க்கு வரம் தரும் அறுபடை வீட்டு அழகன்) 'என் அப்பன் முருகனே கதி' என்று முருகப் பெருமானின் பொற்பாதங்களில் சரணமடைந்திருக்கும் இலட்சோப இலட்சமுருகனடிமைகளை மனமுருகி முருகா சரணம் என வாய் விட்டுக் கூற வைத்திருந்தது. திருச்செந்தூர் ஆலயத்தின் பின்பகுதியுடன் வெளியாகியிருந்த அறுபடை முருகனது திருக்கோலங்கள் மனதிற்கு மிகுந்த ஆறுதலளிப்பதாக அமைந்திருந்தன.

இரா. வளையாபதி, தோட்டக்குறிச்சி


**திருக்கோயில் திங்கள் இதழ்**



| | |
|---|---|
| தனி இதழின் விலை | ரூ 10/ |
| ஓராண்டுச் சந்தா | ரூ 120/ |
| ஐந்து ஆண்டுச் சந்தா | ரூ. 500/ |
| பத்து ஆண்டுச் சந்தா | ரூ 1000/ |
| ஆயுட்காலச் சந்தா | ரூ 1500/ |

(ஆயுட்காலம் என்பது அதிகபட்சமாக 15 ஆண்டுகள் மட்டும்)

**''திருக்கோயில்'' இதழில் விளம்பரம் செய்து பயனடைவீர்!**

**திருத்திய விளம்பரக் கட்டண விவரம் :**

| | |
|---|---|
| 1. பின்பக்க அட்டை வெளிப்புறம் (வண்ணத்தில்) | ரூ 15,000/ |
| 2. முன்பக்க அட்டை உள்புறம் (வண்ணத்தில்) | ரூ 10.000/ |
| 3. பின்பக்க அட்டை உள்புறம் (வண்ணத்தில்) | ரூ 7,500/ |
| 4. உள்புறம் முழுப்பக்கம் | ரூ 5,000/ |
| 5. உள்புறம் அரைப்பக்கம் | ரூ 3,000/ |

இதற்கான பணவிடை / வங்கி வரைவோலையை ஆணையர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, 119, உத்தமர் காந்தி சாலை சென்னை 600 034 என்ற முகவரிக்கு அனுப்பவும்.


# எண்ணச் சிதறல்

திருச்சிற்றம்பலம்

நாள் 19.05.2007.

அன்புடையீர்,

சென்ற ஏப்ரல் திங்களில் ஒரு நாள் புரசை அருள்மிகு கங்காதீஸ்வரர் திருக்கோயிலுக்கு அடியேன் சென்றபோது கோகழியான் திருவுளம் பற்றியதால், பிரகாரத் திருச்சுற்று வருகையில் "திருக்கோயில்" திங்கள் இதழ் பற்றிய தகவல் பலகையைக் கண்ணுற்றேன். விற்பனைக்கும் இந்த இதழ் உள்ளது என்று அறிந்து அந்த ஏப்ரல் திங்கள் இதழ் ஒன்றை வாங்கிக் கொண்டேன்.

அன்னாள் வரை "திருக்கோயில்" இதழைப் பார்த்து அறியாத அடியேனுக்கு அதனை சுட்டிக்காட்டி இதழின் சிறப்புக்களை மேலும் அறிய வைத்த ஈசனின் கருணை தான் என்னே.

காலம் தாழ்த்தாது இதழுக்காக ஐந்தாண்டு சந்தா அனுப்பி, மே திங்கள் இதழும் வரப்பெற்றேன்.

சைவ, வைணவக் கருத்துக் களஞ்சியங்கள், திருத்தலச் சிறப்புக்கள், அனைத்திற்கும் மேலாக சிறப்பாசிரியரின் மணியான இதழ் அறிமுக முகப்புக் கடிதம் ஆகிய அனைத்தும் படிப்போரிடையே பக்தி நெறியையும், தெய்வத் தமிழ்பால் ஈடுபாட்டினையும் பேணுவது கண்டு மிக்க மகிழ்ச்சி.

"திருக்கோயிலி"ன் ஆன்மீகப் பணி மேலும் சிறக்கவும், நீடித்துத் தழைக்கவும் கோகழியான் திருவருள் நல்கட்டும்.

அன்புள்ள,
சித்தாந்த இரத்தினம்
டாக்டர் எம்.ஆர். சந்தானம்,
வியாசர்பாடி, சென்னை

# குமரேச சதகம் காட்டும் வாழ்வியல் நெறிகள்

கவிமாமணி. முனைவர்.
வேலூர்.ம.நாராயணன்.எம்.ஏ.,பி.எச்.டி.,



''மரம் நல்லது தான்: முசுறு கெட்டது'' என்பது ஒரு பழமொழி: கனிகள் கனிந்து குலுங்கும் பழமரம். அருகில் சென்று சுவைக்கலாம் என்றால் முசுறுகள் அதாவது சிவந்த- பெரியவகை எறும்புகள் மரத்தைச் சூழ்ந்து கொண்டு நம்மைக் கடிக்கவரும். நல்ல அறிஞர்கள் செல்வர்களிடம் சென்று பயன்பெறலாம். என்றால் அருகிலுள்ள சிலர் அவர்களிடம் நம்மை நெருங்கவே விடாமல் விரட்டிவிடுவார்கள். இந்தக் கொடுமையின் விரிவாக்கச் சான்று பாடலாக இப்பாடல் அமைகின்றது.

குமரேசசதகம்...! நம் தமிழ் மொழியில் திகழும் சதக இலக்கியங்களுள் சிறந்தது. நூறு பாடல்களின் தொகுப்பு. சதம் என்றால் நூறு. சதகம் என்றால் நூறு பாடல்களின் தொகுப்பு.

புதுக்கோட்டைக்கருகில் உள்ள திருப்புல்வயல் முருகன் மீது பாடப் பெற்றவை. பாடியவர் குருபாத தாசர், தேனினும் இனிய சந்தம். கணவன்- மனைவி-தாய் தந்தை- மகன்- அரசன், வணிகர்- வேளாளர் ஆகியோர்க்குரிய பண்புகள் யாவை? நல்லன- தீயன- ஏற்கத்தக்கன- தள்ளத்தக்கன யாவை? என்பதைப் பற்றியெல்லாம் பிற சதகங்களை விடவும் மிகமிக அருமையாகவும் நிறைவாகவும் பாடியுள்ளார் குருபாத தாசர். பாடல்களின் நடையழகு - கருத்தழகு ஆகியனவற்றைப் பார்க்கும் பொழுது இவர் 18-ஆம் நூற்றாண்டினராக இருக்கலாம் என்று தோன்றுகிறது. வேளாளர் மரபினரான இவர்தம் இயற்பெயர் முத்து மீனாட்சி கவிராயர்ஆகும்.

இத்தகு சிறப்பிற்குரிய குமரேசசதகத்தில் நமது செம்மாந்த வாழ்க்கைக்குரிய வாழ்வியல் நெறிகள் எங்ஙனம் பொலிகின்றன என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

புலவர்கள் அவையடக்கம் பாடுவது மரபு. எனினும் இந்நூலில் குருபாத தாசரின் அவையடக்கம் நம்மை மயக்குகிறது. இவரது புலமைக்கு உரைகல்லாக உள்ளது.

**''மாரிக்கு நிகர் என்று பனிசொரிதல் போலவும்**
**மனைக்கு நிகர் என்று சிறுபெண்**
**மணல்வீடு கட்டுவது போலவும் சந்திரன் முன்**
**மருவு மின்மினி போலவும்...''**

கற்றறிந்த பெரும்புலவர் முன்னிலையில் நான் குமரேசசதகம் பாடுகிறேன் என்று அடுக்கிக் கூறுவது இவரது புலமையையும் பணிவையும் காட்டுகிறது. பெற்றெடுத்துப் பேணிக்காப்பவரை மட்டுமே நாம் பிதா என்கிறோம்.

குருபாத தாசர் அப்படிக் கருதவில்லை. எவரெல்லாம் பிதாவாக மதிக்கத் தக்கவர்கள் என்பதை அழகாக விளக்குகின்றார்.

**''தவமது செய்தே பெற்றெடுத்தவன் முதல் பிதா**
**தனைவளர்த்தவன் ஒரு பிதா**
**தயையாக வித்தையைச் சாற்றினவன் ஒரு பிதா**
**சார்ந்த சற்குரு ஒரு பிதா...**

என்று விளக்கி மேலும் தொடர்கிறார். அரசன். ஆபத்து வேளையில் உதவுபவன், அன்புள்ள முன்னோன் (அண்ணன்). மனைவியின் தந்தை, தமது வறுமையைத் தீர்த்தவர் இவரெல்லாம் தந்தைக்குரிய சிறப்புடையவர்களே என்கின்றார். ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் மகுடம் போல்

**''மவுலிதனில் மதியரவு புன்னைவிமலர் உதவுசிறு**
**மதலையென வரு குருபரா!**
**மயிலேறி விளையாடு குகனே! புல்வயல்நீடு**
**மலைமேவு குமரேசனே!''**

என்று நிறைவு செய்கின்றார் குருபாததாசர்.

தனி மனித வாழ்வியல் நெறிகளுள் முதன்மையானது அவரவரும் உடல் நலம் பேணுதலாகும். உடலார் அழியின் உயிரார் அழிவர் என்றார் திருமூலர். இங்கே நாம் உடல் நலம் பேணும் நெறிகளை இவ்வாறு பட்டியலிட்டுக்காட்டுகின்றார் புலவர்.

**''மாதத் திரண்டுவிசைமாதரைப் புல்குவது**
**மறுவறு விரோசனந்தான்**
**வருடத் திரண்டு விசை தைலம் தலைக்கிடுதல்**
**வாரத்திரண்டு விசையாம்**
**சாதத்தில் எவ்வளவானாலும் புசித்தபின்**
**தாகனந்தனக்கு வாங்கல்**
**தயையாக உண்டபின் உலாவலிவை மேலவர்**
**சரீரசுகம் ஆமென்பர் காண்!''**

அதாவது மாதத்திற்கு இரண்டு முறை மட்டுமே மாதரைத் தழுவ வேண்டும். வருடத்திற்கு இரண்டு முறை வயிற்றைச் சுத்தம் செய்ய மருந்துண்ண வேண்டும். வாரமிருமுறை எண்ணெய் தேய்த்துக் குளிக்க வேண்டும்.

எவ்வளவு உணவானாலும் உண்ட பிறகே தண்ணீர் பருக வேண்டும். உண்டபின்பு கட்டாயம் நடைப்பயிற்சி செய்ய வேண்டும் என்கிறார்.

சில நிகழ்வுகளுக்குக் கட்டாயம் சிலர் துணையிருக்கத்தான் வேண்டும். இல்லாவிட்டால், அவை சிறப்படையாது என்கிறார் புலவர். அவை எவை?

**''குருவிலா வித்தை கூர் அறிவிலா வாணிபம்**
**குணமிலா மனைவியாசை**
**குடிநலம் இலா நாடு நீதியில்லா அரசு**
**குஞ்சரம் இல்லாத வெம் போர்**
**உருவிலா மெய்வளமை பசியிலா உண்டி: புகழ்**
**உண்மையில்லாத வசனம்**
**யோசனை இல்லா மந்திரி தைரியம் இலாவீரம்**
**உதவியில்லாத நட்பு''**
இவையெலாம் சிறக்காதவை என்கிறார்.

உடல் நலம் பேணும் நெறிகள் சொன்ன புலவர் நோய் வரும் வழிகளையும் இவ்வாறு கூறுகின்றார்.

**''கல்லினால் மயிரினால் மீதூண் விரும்பலால்**
**கருதிய விசாரத்தினால்**
**கடுவழி நடக்கையால் மலசலம் அடக்கையால்**
**கனிபழங்கறிஉண்ணலால்**
**நெல்லினால் உமியினால் உண்டபின் மூழ்கலால்**
**நித்திரைகள் இல்லாமையால்**
**நீர்பகையினால் பனிக்காற்றின் உடல் நோதலால்**
**நீடுசருகு இலையூறலால்**
**மெல்லிநல் லார்கலவி அதிகம் உள் விரும்பலால்**
**விழ்மலம் சிக்குகையினால்**
**மிகுசுமை எடுத்தலால் இளவெயில் காய்தலால்**
**மெய்வாட வேலை செயலால்**
**வல்லிரவி லேதயிர்கள் சருகாதி உண்ணலால்**
**வன்பிணிக் கிடமென்பர் காண்**
**மயிலேறிவிளையாடு குகனேபுல் வயல்நீடு**
**மலைமேவு குமரேசனே''**

சிறு கற்களும் தலைமுடியும் கலந்துள்ள உணவு உண்பதாலும் என்று தொடங்கி இரவிலே கீரை தயிர் உண்பதாலும் என்பதுவரை நோய்கள் வரும் வழிநிலையை விளக்குகின்றார் புலவர். நம் பாவேந்தர் அவர்களும் தமது குடும்ப விளக்கில்.

''கீரை தயிர் இரண்டும் கேடு செய்யும் இரவில்
மோரைப் பெருக்கிவிடு முப்போதும் நேரிழையே!

என்று பாடியிருப்பது இங்குக் குறிக்கத்தக்கதாகும். குருபாத தாசரின் இந்தப் பாடலில் கனிபழங்கறி உண்ணலால் என்பதற்கு மிகவும் பழுத்த பழம் என்றும் பழங்கறி-பழைய காய்கறி உணவு என்றும் பொருள் கொள்ளல் வேண்டும்.

வெகுமக்களிலேயே பேசும் மாக்களாகப் பலர் எல்லாக் காலங்களிலும் வாழ்கின்றனர். இதோ அத்தகையோரைப் பட்டியலிட்டுக் காட்டுகின்றார் சதகப் புலவர்.

''தான் பிடித்தது பிடிப்பென்று மேலவர் புத்தி
**தள்ளிச் செய்வோர் குரங்கு**
**சபையில் குறிப்பறிய மாட்டாமல் நின்றவர்**
**தாம் பயன் இலாத மரமாம்**
**வீம்பினால் எளியரை எதிர்பண்ணி நிற்குமொரு**
**வெறியர் குரை ஞமலியாவர்**
**மிக நாடி வருவோர் முகம்பார்த்திடா லோபர்**
**மேன்மையில் லாத கழுதை**

என்று தொடர்கின்றது அந்தப் பட்டியல். இத்தகைய பண்புகள் நம்மிடமிருப்பின் தள்ளி விட வேண்டுமென்பது குறிப்பு.

நல்லவரின் நட்பால் நமக்கு நேர்வன என்ன? எல்லா நலமும் இயல்பாய் அமையும் தானே! அதை இவ்வாறு விளக்குன்றார்.

**''சந்தன விருட்சத்தை அண்டி நிற்கின்ற பல**
**தருவும் அவ் வாசனை தரும்**
**தங்கமக மேருவை அடுத்திடும் காக்கையும்**
**சாயல் பொன் மயமே தரும்**
**அந்தமிகு மரகதக் கல்லைத் தரித்திடில்**
**அடுத்ததும் பசுமையாகும்**
**ஆன பெரியோர் களோடு சகவாசம் அதுசெயின்**
**அவர்கள் குணம் வருமென்பர் காண்...''**

இவை நம் வாழ்வில் கொள்ளத் தக்கன வாகும்.

காலத்தால் உதவாத பொருள்களால் நமக்கு என்னபயன் பொருள்கள் நமக்குப் பயன்படும் வண்ணமாக நமது வாழ்வியல் நெறிமுறைகள் அமைய வேண்டும் என்று அறிவுறுத்துகின்றார் புலவர்.

**''கல்லாது புத்தகம் தன்னில் எழுதி வீட்டினிற்**
**கட்டி வைத்திடு கல்வியும்**
**காலங்களுக்கு உதவ வேண்டும் என்று அன்னியன்**
**கையிற் கொடுத்த பொருளும்**
**இல்லாளை நீங்கியே பிறர்பாரி சதம் என்**
**றிருக்கின்ற குடிவாழ்க்கையும்**
**ஏறுமாறாகவே தேசாந் தரம் போய்**
**இருக்கின்ற பிள்ளை வாழ்வும்..''**

இருந்தும் இல்லாதவையே. காலத்தில்

உதவாதவை. இவற்றைத் தக்கவண்ணம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதே புலவர் விருப்பம்.

யார் யார்க்கு என்னென்ன கடமைகள்? இவற்றை அவரவரும் உணர்ந்து செயல்பட்டால் நம் கண்ணெதிரிலேயே சொர்க்கத்தைக்காணலாம்.

''கல்வியொடு கனமுறச் சபையின் மேல்வட்டமாக
காண வைப்போன் பிதாவாம்
கற்றுணர்ந்தே தனது புகழால் பிதாவைப்பிர
காசம் செய்வோன் புத்திரன்
செல்வமிகு கணவனே தெய்வ மென்றனுதினம்
சிந்தை செய்பவள் மனைவியாம்
சிநேகிதன் போலவே அன்புவைத்துண்மை மொழி
செப்புபவனே சகோதரன்
தொல்வளம் மிகுந்த நூல் கரை தெரிந்துறுதி மொழி
சொல்லும் அவனே குரவன் ஆம்
சொன்ன நெறி தவறாமல் வழிபாடு செய்துவரு
துய்யனே இனிய சீடன்
வல்லிரகம் விஞ்சுசுர குஞ்சரியுடன் குறவர்
வஞ்சியை மணந்த கணவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே..

வெஞ்சமரில் ஆயிரம் யானைகளை வெல்லுதல் ஆண்மையில்லை. பிறர்மனை நோக்காமையே ஆண்மை. அதிலும் அது பேராண்மை என்பார் வள்ளுவர். இங்கே குருபாத தாசரும் பிறர்மனை நயவாதே என்று நமக்கு இவ்வாறு அறிவுறுத்துகின்றார்.

தம்தாரம் அன்றியே பரதார மேல்நினைவு
தனைவைத்த காமுகர்க்குத்
தயையில்லை நிசமில்லை வெட்கமிலை சமரினில்
தைரியம் சற்றுமில்லை
நந்தாதசனம் இல்லை இனம் இல்லை எவருக்கும்
நட்பில்லை கன்தையில்லை
நயம் இல்லை இளமைதனில் வலிமையிலை
ஞானம் இலை என்பர் கண்டாய்..

இப்பாடலில் வரும் கனதையில்லை என்பதற்கு மதிப்பு இல்லை என்று பொருள். நம் வாழ்வில் எந்த நிலையிலும் நாம் கைவிடத் தகாதவர்கள் யாவர்? என்பதற்கு இப்பாடலில் அருமையாக விளக்கம் கூறுகிறார் குருபாததாசர்.

''அன்னைசுற் றங்களையும் அற்றையாள் முதலாக
அடுத்துவரு பழையோரையும்
அடுபகைவரில் தப்பிவந்தவொரு வேந்தனையும்
அன்பான பெரியோரையும்
தன்னைநம் பினவரையும் ஏழையான வரையும்
சார்ந்த மறையோர் தம்மையும்
தருணம் இது என்று நல் ஆபத்து வேளையிற்
சரணம் புகுந் தோரையும்
நன்னயமதாகமுன் உதவிசெய் தோரையும்
நாளும் தனக்கு உறுதியாய்
நந்து சேகவனையும் காப்பதல் லாதுகை
நழுவ விடல் ஆகாது காண்...''

என்பது அவ்வழகிய சதகப்பாடலாகும்.

இவையனைத்தும் நாம் வாழ்வில் வெற்றி பெற உதவும் வாழ்வியல் நெறிகள் அன்றோ!

இங்ஙனம் குமரேச்சதகம் நூறுபாடல்களும் நூறு தேனடைகளாகத் திகழ்ந்து நமக்குச் சிந்தனை விருந்து படைக்கின்றன. நாம் வாழ வழிகாட்டும் கலங்கரை விளக்கங்களாக ஒளிர்கின்றன. பயில்வோம். பரப்புவோம்!

## கீதையின் சாரம்

ஒரு மனிதன் அவனுக்குத் தன்வீடு அசிங்கமாய்த் தோன்றவே வீட்டைவிட்டு வெளியேறி வேறொரு கிராமத்திற்குப் போனான். அங்கும் அவனுக்குக் குப்பையும் கூளமும் காணச் சகியாமையால் காட்டிற்குப் போனான். காட்டில் அவன் ஒரு மரத்தடியில் உட்கார்ந்திருக்கையில் அவன் தலையில் ஒரு பறவை எச்சமிட்டது. அவன் காடும் மோசமாக இருக்கிறதே என்று சொல்லிக்கொண்டு ஓர் ஆற்றில் இறங்கி நின்றான். ஆற்றில் பெரிய மீன்கள் சிறிய மீன்களைப் பிடித்துத் தின்பதைக் கண்டதும் அவனுக்கு மிகவும் அருவருப்பாகி விட்டது.

''இந்த சிருஷ்டி முழுவதும் அசிங்கம் தானா? இங்கே உயிரைத் துறந்தாலன்றித் தப்ப வழியில்லை'' என்று அவன் முடிவு செய்து தீ மூட்டி அதில் விழுந்து சாகத் தயாரானான். அப்போழுது அவ்வழியே வந்த ஒரு கனவான் 'ஐயா, உமது இந்த ஆபாசமான உடலில் மாமிசம் எரியத் தொடங்கினால் இங்கே எவ்வளவு துர்நாற்றம் வீசும்? அதைச் சிறிது எண்ணிப் பாரும்'' என்றான். அப்பொழுது அம்மனிதனுக்கு அறிவு வந்தது.

எல்லாம் மோசம், அருவருப்பானது என்று சொல்லி, எல்லாவற்றையும் ஒதுக்குவோமாயின் ஒன்றும் நடைபெறாது என்பது இதன் கருத்து. நீசிறிய கர்மங்களுக்குத் தப்ப விரும்பினால் வேறு பெரிய கர்மங்கள் உன் தோள் மீது வந்து ஏறிக் கொள்ளும். புறச் செயல்களை அகற்றுவதால் கர்மங்கள் அகலமாட்டா. பயன் கருதாது புரிந்து கொண்டே போவோமாயின் மெள்ள மெள்ள அதை நாம் உணர்வோம். ஆகையால் பயன் கருதாது காரியங்களைச் செய்து கொண்டே இருக்க வேண்டும்.

- வினோபாவின் கீதைக் கதைகளிலிருந்து

# அரசராக இருந்து ஆழ்வாரான குலசேகர ஆழ்வார்

பெ. இராமநாத பிள்ளை - செயல் அலுவலர்

அரசராக இருந்து பல காலம் மலையாள நாட்டினை ஆண்டு, பின்னர் அரசவாழ்வைத் துறந்து ஆழ்வாராக மாறியவர் குலசேகர ஆழ்வார். பெருமாளின் ஏழாவது அவதாரமான ராம அவதாரத்தில் ராமனிடம் அளவில்லாத பக்தி கொண்டு **''பெருமாள் திருமொழி''** என்ற அழகிய பிரபஞ்சத்தை பாடியவர்.

ராமபிரானின் வரலாற்றை கேட்கும் பொழுது எல்லாம் பக்தியுணர்வு மேலிட்டு தன்னையே மறந்து புலம்பியதை குரு பரம்பரை கதைகள் மூலம் அறியலாம். திருமாலிடமும், திருமால் அடியாரிடமும் இவர் கொண்டிருந்த பக்தியும், மதிப்பும் அளவிடற்கரியது. இவர் **''வானாளும் செல்வமும், மண்ணரசும் யான் வேண்டேன்''** என மன உறுதியுடன் திருமால் அடியார் ஆனார்.

எனவே, **''பொன்னின் சிலைசேர் நுதலியர்வேள் சேரலர்கோன் முடிவேந்தர் சிகாமணி''** என்று இராமானுஜரால் போற்றப்பட்டவர் இவர். பகைவரை அடக்கி அமைதியை நிலை நாட்டி நீதியரசராக ஆட்சி புரிந்தாலும், அவருடைய மனம் அரசவாழ்வில் ஆறுதல் பெறவில்லை.

ஒரு நாள் உறக்கம் கலைந்து படுக்கையில் இருந்தவாறே பெருமானின் கல்யாண குணங்களை எண்ணி தியானித்துக் கொண்டே அசையாமல் இருந்து விட்டார். அமைச்சர்களும், வேலையாட்களும் இவர் இருக்கும் நிலையை கண்டு பிரமித்தனர். பின்னர், தாயும் தந்தையுமான ஸ்ரீ ரெங்கராஜன் என்னை ஒரு பொருளாக மதித்து அற்புத தரிசனம் தந்து என்னை ஆட்கொண்டான் என்று தியானத்திலிருந்து கலைந்து விடை தந்தார். தாமரை இலை தண்ணீர் போலவும், தோட்டில் ஒட்டாத புளியம்பழம் போலவும் பற்று அற்ற நிலையில் அரசவாழ்வு நடத்தினார். பல திருத்தலங்களுக்குச் சென்று பெருமாளை வழிபட மனம் அலை மோதியது.

**''இருளரியச் சுடர்மணிகள் இமைக்கும்**
**நெற்றி இனத்துத்தியணிபண**
**மாயிரங்களார்ந்த அரவரசப் பெருஞ்சோதி**
**அனந்தனென்றும்**
**அணிவிளங்குமயர் வெள்ளை யணையமேவி,**
**திருவரங்கப்பெரு நகருள்**
**தெண்ணீர் பொன்னி திரைக்கையாலடி**
**வருடப்பள்ளி கொள்ளும்**
**கருமணியைக் கோமளத்தைக் கண்டு**
**கொண்டு**
**என் கண்ணிணைகள் என்று கொலோ**
**களிக்க நாளே''**

என்று மனம் உருகி பாடினார்.

தென்திசைநோக்கி பள்ளி கொண்டிருக்கும் ரெங்கநாதரின் புகழ் பாடும் அடியார் கூட்டத்தில் நானும் சேருவேன் என்று கதறி அழுதார். மேலும், பாகவதர்களை சரணடைந்து அவர்களுக்கு தொண்டு புரிவதையே பெரும் பேறாகக் கருதினார். இவர் வடக்கே அயோத்தி வரை யாத்திரை செய்திருக்கிறார் என்று குரு பரம்பரை கதைகள் கூறும். திருவரங்கத்திற்கு அடுத்தபடியாக தேனாறு பூஞ்சோலை திருவேங்கடம் என்ற திருப்பதி தான், இவர் உள்ளத்தை மிகவும் ஈர்த்தது. அங்குள்ள நீர்நிலைகளில் ஒரு மீனாக பிறந்திருக்கலாமே! அங்குள்ள சோலைகளில் ஒரு பறவையாக பிறந்திருக்கலாமே! திருவேங்கட மலையில் ஒரு செண்பக மரமாக நிற்கலாமே! இதுவென்றோ பாக்கியம் என எண்ணினார்.

**''மீனாய்ப் பிறக்கும் விதியுடையனாவேனே''**
**''கோனேரி வாழும் குருகாய்ப் பிறப்பேனே''**
**''செண்பகமாய் நிற்கும் திருவுடையேன்**
**ஆவேனே''** என்றார்

நாம் திருக்கோயில் படியாக கிடந்தால் அடியார் திருவடிகள் நம் மீது படும். மேலும், பெருமாளின் பவளவாயை பார்த்துக் கொண்டே இருக்கலாம் என்று எண்ணினார்.

**''செடியாய வல்வினைகள் தீர்க்கும்**
**திருமாலே!**
**நெடியானே! வேங்கடவா! நின்கோயிலின்**
**வாசல்**
**அடியாரும் வானவரும் அரம்பையரும்**
**கிடந்தியங்கும்**
**படியாய்க் கிடந்துப் பவளவாய்**
**காண்பேனே!** என்று பாடினார்

வைஷ்ணவத்திற்கு சிறந்த வழி காட்டியாக விளங்கினார். திருப்பதி உள்ளே குலசேகரன் படி என்று பெயர் இன்றும் உள்ளது.

பின்னர், வித்வகோடு என்ற தலத்தில் உள்ள பெருமாளை தன்னுடைய இஷ்ட தெய்வமாக வணங்கினார்.

''தருதுயரம் தடாயேல் உன்சரணல்லால் சரணில்லை
விரைவு குழவு மலர்ப்பொழில் சூழ்வித்துவக்கோட்டம்மானே''
''அரசினத்தால் ஈன்றதாய் அகற்றிடினும் மற்றவன்தன் அருள் நினைந்தே
அழங்குழவி அதுவே போன்று இருந்தேனே!
என்று உருகினார்.

குழந்தையை தாய் சினத்தினால் அடித்தாலும், அக்குழந்தை தாயை தானே நாடி நிற்கும் அதுபோல பெருமாளை தவிர எனக்கு சரண் ஒன்றுமில்லை. நோயாளியை வாளால் அறுத்து மருத்துவர் சுட்டாலும் மருத்துவரை நோயாளி வெறுப்பதில்லை. அதுபோல நான் உன்னை வெறுக்க மாட்டேன். வானம் மழையை மறந்தாலும் பயிர்கள் வானத்தையே பார்த்துக் கொண்டு இருக்கும் அதுபோல நானும் உன் அருளையே பார்த்துக் கொண்டு இருப்பேன். நடுக்கடலில் சென்று கொண்டிருக்கும் கப்பலில் உள்ள பறவையானது கப்பலை விட்டு பறந்து சென்றாலும் கடலை கடக்க இயலாமல் கப்பலிடமே வருவதைப் போல நானும் பிறவிக் கடலை கடக்க முடியாமல் உனது திருவடியை சரண் அடைவேன் என்று இவர் கூறும் உவமைகள் மிகவும் சிறப்பானவை.

மேலும், தன்னை கோசலையாக பாவித்து ராமருக்கு தாலாட்டு பாடுகிறார்.

''மன்னுபுகழ் கோசலைத்தன் மணிவயிறு வாய்த்தவனே!
தென்னிலங்கைக் கோன் முடிகள் சிந்துவிதாய் செம்பொன்சேர்
கன்னிநன்மா மதில்புடை சூழ் கணபுரத் தென்கருமேனியே!
என்னுடைய இன்னமுதே! இராகவனே! தாலேலோ!
என்று இவர் தாலாட்டும் அழகு எண்ணி இன்புறத்தக்கது.''

இத்தகைய கருணைக்கடலான ராமரிடம் பேரன்பு கொண்ட இவர் தன்னை தசரதனாக பாவித்து புலம்பிய பாசங்கள் நெஞ்சைநெகிழ வைப்பன.

.................... எம் இராமா ஓ! உளைப் பயந்த
கைகேசிதன் சொற்கேட்டு
நன்றாக நானிலத்தை ஆள்வித்தேன்
நன்மகனே! உன்னை நானே!
''நெய்வாய வேல் நெடுங்கண் நேரிழையும்
இளங்கோவும் பின்பு போக
எவ்வாறு நடந்தனை! எம் ராமா! ஓ!
எம்பெருமான்! என் செய்கேனே!
என்று புலம்புகிறார்.

காட்டிலே ராமர் எவ்வாறு துயில் கொள்வர் அங்கு மெத்தை இல்லையே என்ற கவலை மேலிட,

''மெல்லணை மேல் முன்துயின்றாய் இன்றினிப்போய்
வியன் கான மரத்தின் நீழல்
கல்லணை மேல் கண்துயிலக் கற்றனையோ?
காகுத்தா! கரிய கோவே!
என்று புலம்புகிறார்.

குலசேகர ஆழ்வார் கிருஷ்ண அவதாரத்திலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். தன்னை தேவகியாகவும், வசுதேவராகவும் பாவித்துக் கொண்டு பாசுரம் பாடினார்.

''ஏலவார்குழல் என்மகள் தாலோ!
என்றென்று உன்னை என் வாயிடை நிறையத்
தால் ஒலித்திடும் திருவினை இல்லாத் தாயரில் கடையாயினதாயே''
என்று பாடினார்.

இறுதியாக பத்து பாசுரங்களில் ராமகதையை முழுவதுமாக பாடி நிறைவு செய்த அழகு நெஞ்சைநெகிழ வைப்பது, உருகி வழிந்து புறப்பட்ட சொல் என்று பரிவாச்சான் பிள்ளை கூறுவது குலசேகரன் பாடலுக்கு மிகவும் பொருந்தும். நாமும் குலசேகரன் ஆழ்வாரைப் போல உலகில் பற்று அற்று வாழ்ந்து 'அற்றது பற்று எனில் உற்றது வீடு' என்ற உயர்ந்த நிலை ஏற்பட பெருமாளிடம் பக்தி கொள்வோமா.



# இறைவன் எழுதிய தமிழ் மடல்



பேராசிரியர் முனைவர் ச.கணபதி ராமன்

தமிழ் இலக்கியத்தைச் செம்மைப்படுத்த காலங்கள் தோறும் சங்கங்கள் இருந்தன என்பது வரலாற்று உண்மை. பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னர் முதல் சங்கம் தோன்றியது. இதன் தலைவராகத் திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள் விளங்கினார். தமிழ் சங்கத்தின் தலைமைப் புலவராக விளங்கிய விரிசடைக் கடவுள் தமிழ்ப் புலவர்களை வறுமையில் இருந்து விடுவித்து நல்வாழ்வு தந்து வாழவைத்தார் என்பது தமிழ் இலக்கிய உலகச் செய்தி. சிவப் பரம்பொருளான மதுரை சொக்கநாதர் வறுமையால் வாடிய பாணபத்திரன் என்ற புலவனையும் வாழவைத்து அருள் பாலித்தார்.

### சேரநாட்டுச் செய்தி

சேர நாட்டில் சேரமான் பெருமான் என்ற மன்னன் ஆட்சி புரிந்து வந்தான். அவன் சித்தத்தில் சிவனையே எப்போதும் சிந்தித்து இருப்பவன். வருகின்ற வறியவர்களுக்கும், சிவனடியார்களுக்கும் வாரி, வாரி வழங்கும் வள்ளலாகத் திகழ்ந்தான். உவர் மண் ஏற்றி வந்த வண்ணான் மீது உவர் மண் பட்டுத் திருநீறாகக் காட்சி தந்தது. யானை மீது ஊர்வலம் வந்த சேரமான், வண்ணானை முழுநீறு பூசிய சிவனடியார் எனக் கருதி யானை மீதிருந்து இறங்கி வண்ணானிடம் ஓடி அவன் திருவடியில் விழுந்து வணங்கினான். அதிர்ச்சியுற்ற வண்ணான் நடுங்கி நான் "அடி வண்ணான்" என்று கூறிட நான் 'அடிச் சேரன்' என்றான் சேரமன்னன்.

காணுகின்ற காட்சியெல்லாம் சிவக்காட்சியாகவே கண்ட சேரமான் பெருமான், சுந்தரமூர்த்தி சுவாமிகள் காலத்தவன். அவரோடு இணைந்து பல திருத்தலங்களுக்குச் சென்று வழிப்பட்டவன். "பொன் வண்ணத்து அந்தாதி" "திருக்கைலாய ஞான உலா" முதலிய நூல்களைப் பாடியவன். இவன் இயற்றிய திருகைலாய ஞான உலா, சிவபெருமான் முன்னிலையில் கைலை மலையில் அரங்கேற்றப்பட்ட பெருமை உடையது. கைலையில் முதன்முதலில் அரகேற்றப் பெற்ற முதல் தமிழ் நூல் இது என்றும் கூறலாம். சேரமான் பெருமான் தமிழையும், சைவத்தையும் தமது இரு கண்களாகக் கொண்டவன். திருக்கைலாய ஞான உலாவில் மடந்தைப் பருவத்தைக் கூறும்போது "தீந்தமிழின் தெய்வ வடிவாள்" என்று குறிப்பிடுகிறான்.

"கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்று அறியும் ஐம்புலனும் ஒண்டொடி கண்ணேயுள என்ற திருக்குறளைத் திருக்கைலாய ஞான உலாவில் அப்படியே எடுத்தாண்டுள்ளான். "இல்லாரை எல்லாரும் எள்குவர் செல்வரை எல்லாஞ் செய்வர் சிறப்பு" என்ற திருக்குறளையும் அப்படியே கீழ்கண்ட வண்ணம் எடுத்தாண்டுள்ளான்.

"இல்லாரை எல்லாரும் எள்குவர் செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு என்னும் - சொல்லாலே
அல்குற்கு மேகலையைச் சூழ்ந்தாள் அணிமுலைமேல்
மல்கிய சாந்தொடு பூண்புனைந்து நல்கூர்
கடையிடையே உள்ளுருகக் கண்டாள் எழிலார்
நடைபெடை அன்னத்தை வென்றாள்"

என்பது அது.

### தமிழ் மடல்

இத்தகைய தமிழ்ப் புலமையும் இடையீடற்ற சிவசிந்தனையும், வள்ளல் தன்மையும் கொண்ட சேரமான் பெருமானுக்குச் சிவபெருமான் எழுதிய மடல் பதினொன்றாம் திருமுறையில் முதற் செய்யுளாக உள்ளது. அச்செய்யுள்

மதிமலி புரிசை மாடக்கூடல்
பதிமிசை நிலவு பால்நிற வரிச்சிறகு
அன்னம் பயில்பொழில் ஆலவாயின்
மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்கு
ஒருமையின் உரிமையின் உதவி ஒளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா உகைக்கும் சேரலன் காண்க
பண்பால் யாழ்பயில் பாணபத்திரன்
தன்பால் என்பால் அன்பன் தன்பால்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப்பதுவே

என்பதாகும்.

தம்முடைய அடியாரும்,

ஏழைப்புலவனுமாகிய தொண்டன் வறுமையில் வாடக்கூடாது என்று சொக்கநாதர் மடல் எழுதி பொருள் கொடுக்கச் சொன்னது வியத்தற்குரியது. இறைவனால் பொருள் கொடுக்க முடியும், ஆயினும் சேரமானையும் பாணபத்திரன் அருமையினையும் உலகிற்குக் காட்டவே இவர் மடல் எழுதி அனுப்பினார். உலக இலக்கிய வரலாற்றில் இறைவன் தன் அடியார்க்காக மடல் எழுதி அனுப்பிய வரலாறு வேறு எங்கும் இல்லை எனலாம்.

தமிழ்ச் சங்கத் தலைமைப் புலவராக வீற்றிருந்த சொக்கநாதர். தமிழில் தன் நண்பனுக்காக மடல் எழுதியது. பாராட்டுதற்குரியது. தலைமைப் பொறுப்பேற்றிருப்போர் தொண்டர்களுக்குத் துணை நிற்க வேண்டும் என்பதற்கு முன்னோடியாகத் திகழ்ந்துள்ளார் சொக்கநாதர். இந்த மடலின் அமைப்பே மிக அருமையாக உள்ளது. நாம் இப்போது எழுதும் கடிதத்தில் முதலில் கடிதம் எழுதுவோரின் ஊர்ப்பெயரையே எழுதுவோம்.

இதைப்போன்றே சொக்கநாதரும் மாடக்கூடல் என்று மதுரையை குறிப்பிடுகிறார்.

'மதிமலிப்புரிசை மாடக்கூடல்'

என்று தொடங்குகிறது மடல்.

விண் தோய்ந்த மாடங்களையும் கோட்டை கொத்தளங்களையும் கொண்ட மதுரையாம். யாம் வீற்றிருக்கும் மதுரை இதனால் செல்வச் சிறப்பும், பாதுகாப்பும் கொண்ட மதுரை என்ற குறிப்பும் புலப்படுகிறது. இந்த மதுரை வானுலகில் இல்லை. நிலவுலகத்திலேயே உள்ளது. அதுவும் நீர்வளம் நிலவளம் நிறைந்த நகராக உள்ளது. பால் நிறமுள்ள அன்னங்கள் நீரில் நீந்தி விளையாடும் மதுரையில் கொலுவீற்றிருக்கும் சொக்கனாகிய யான் எழுதுகிறேன் என்று மடல் பேசுகிறது. செழுமையான மதுரையில் வெள்ளை உள்ளம் கொண்ட, தூய்மையான மக்களே வாழ்கின்றனர் என்ற குறிப்புத் தோன்ற 'பால்நிற வரிச்சிறகு அன்னம்' என்றார்.

### தமிழ் மடலின் சிறப்பு

ஒரு மன்னனுக்கு மடல் எழுதுவோன் தன்னாட்டின் சிறப்பினையும் செல்வத்தையும் எடுத்துக்காட்டி எழுதவேண்டும். என்பதே இயல்பு. அ,வ்வியல்பிற்கேற்ப இம்மடல் எழுதப்பெற்றது. சோலைகள் சூழ்ந்த ஆலவாய்! எனப்பெறும் நகரில் வாழும் சிவன் (சிவபெருமான் அல்லது இறைவன் என்று கூறாது எளிமையாகச் சிவன் என்றார்). எழுதும் கடிதம் என்னவென்றால், பாவலர்களுக்குக் காலமழையாகவும், கருணை வடிவாகவும் காட்சி தந்து, ஒன்றிய சிந்தனையுடன் வாரி வாரி வழங்கிவரும் வெண்கொற்றக் குடையின் கண் வீற்றிருந்து, பேராற்றலோடு அரசு புரியும் சேரமன்னனே உனக்கொரு செய்தி என்கிறது மடல்.

மடல் பெறுவோரின் பெருமையினை உள்ளவாறு உரைத்து எழுதுவது நனி நாகரிகம். அந்த நாகரிக முறைக்கேற்ப செல்வச் சிறப்பும், அறநெறியும், ஆற்றலும் சான்றவர் சேரமன்னன் என்றார். (செருமா உகைத்தல் போர்க் களத்தில் புலிபோல் பாயும் தன்மையினைக் குறிப்பது).


### மடல் கூறும் செய்தி

மடல் கூறும் செய்தி இனி பேசப்படுகிறது. பண்பால் வரும் இந்த பாணபத்திரன் யாழ் மீட்டும் இயல்பினன். இசைத்திறன் மிக்கவன், நாளும் இசையால் எம்மை மகிழ்விக்கும் இசைவாணன். உன்னைப் போன்று இவனும் என்பால் உளங்கனிந்த அன்பினன். பரிசு பெற முழுத் தகுதியுடையவன். (தகுந்தவர்களுக்கே பரிந்துரை செய்ய வேண்டும் என்பது புலப்படுகிறது) நின்னைக் காண வருகிறான். அவனுக்கு நிறைந்த பொருள் (மாட்சிமை தகுந்த பொருள் தீதிலாத பொருள். தீதின்றிவந்த பொருள்) கொடுத்து அனுப்பி விடுக. (அவன் என்னைப் பாடிக் கொண்டே இருக்க வேண்டுமல்லவா? நீ அவன் இசையில் மயங்கி அங்கேயே அவனை வைத்துக் கொள்ளாமல் அனுப்பிவிடு. அவனது குடும்பம் அவனை எதிர் நோக்கியிருக்குமல்லவா? அதனால் அனுப்பி விடுக) என்று மடல் நிறைவு பெறுகிறது.

சமய உலகில் எழுதப் பெற்ற இம் மடல், தமிழ் மக்களின் சமயச் சால்பிற்கு ஏற்ற சான்றாக மிளிர்கிறது. இலக்கியங்களில் கோவலன் மடல் எழுதியுள்ளான். மடல் இலக்கியங்களும் உள்ளன. பிற்காலத்தில் பாரதியும் எட்டையபுர மன்னருக்கு மடல் எழுதினான். ஆயினும் தெய்வமே தம் தொண்டருக்காக மடல் எழுதி மாண்பொருள் பெற்றுத் தந்தது போற்றுதற்குரியதல்லவா?

# காதல் மற்று யாதுமில்லை ?

- முனைவர் டி.எஸ். ராமஸ்வாமி



(அருளிச் செயல்களிலே ஊற்றமுடைய ஒரு பெண்மணி ஒரு நாள் அடியேனிடம் மிகுந்த கோபமாகப் பேசினாள். கொண்ட பெண்டிர் மக்கள் உற்றார் சுற்றத்தவர் பிறரும் கண்டதோடு பட்டது அல்லால் காதல் மற்று யாதுமில்லை, துணையும் சார்வும் ஆகுவார் போல் சுற்றத்தவர் பிறரும் அணைய வந்த ஆக்கம் உண்டேல் அட்டைகள் போல சுவைப்பர் (9-1-1) முதலிய பாசுரங்களில் மனைவி மக்களையும், சுற்றத்தவரையும் ஆழ்வார் சாடியது சரியல்ல; மனைவி மக்களும் சுற்றத்தவரும், நண்பர்களும், சில விதிவிலக்குகள் தவிர, ஒருவருக்கொருவர் உதவி செய்து கொண்டுதான் இருக்கிறார்கள். ஆகவே, ஆழ்வாரின் இந்தப் பதிகத்தை நான் வாசித்து அனுபவிப்பதில்லை என்றார். அந்தப் பெண்மணிக்கு அடியேன் அளித்த விளக்கத்தின் சாராம்சம் தான் இந்த கட்டுரை)

ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் பகவத் கைங்கர்யத்தைவிட பாகவத கைங்கர்யமே சிறந்தது. ஒவ்வொரு ஸ்ரீ வைஷ்ணவனுக்குமுள்ள ஒரே உறவினன் - ஒரே பந்து - ஸ்ரீமன் நாராயணனே. பாகவதர்களுக்கு அடிமை செய்தல் என்பது நம் பேற்றின் எல்லை. அதை நமக்கு அருளிய ஸர்வேசுவரனே நமக்கு இயல்பாக உள்ள பந்து; மற்றபடி சம்ஸார வாழ்க்கையில் உறவினர், பந்துக்கள் எல்லோரும், நமது முன்வினை காரணமாக வந்தவர்கள். ஆகவே தான், நம்முடன் வாழும் மனைவி மக்களையும், உற்றார் உறவினரையும் 'ஆபாசபந்துக்கள்' அதாவது போலி பந்துக்கள் என்றும், ஸர்வேசுவரனே உண்மையான ஆத்ம பந்து என்றும் கூறுகிறார். இந்த போலி பந்துக்கள் போன ஜன்மத்திலோ, அடுத்து வரப்போகும் ஜன்மத்திலோ, நமக்கு உறவினர்கள் என்பது நிச்சயமில்லை. ஆனால், ஒவ்வொரு ஸ்ரீவைஷ்ணவனுக்கும், எல்லாப் பிறவிகளிலும், எம்பெருமான் ஒழிக்க ஒழியாத உறவினனாக இருந்து அவனை வழி நடத்துகிறான். ஆண்டாளும் இதையே, உன் தன்னோடு உறவேல் நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது என்று அருளியுள்ளார்.

''நல்ல கோட்பாட்டு உலகங்கள்
மூன்றினுள்ளும் தான் நிறைந்த
அல்லிக் கமலக் கண்ணனை
அம்தண் குருகூர்ச் சடகோபன்
சொல்லப்பட்ட ஆயிரத்துள்
இவையும் பத்தும வல்லார்கள்
நல்ல பதத்தால் மனைவாழ்வர்
கொண்ட பெண்டிர் மக்களே
(திருவாய்மொழி 8-10-11)

'கொண்ட பெண்டிர்' என்ற சொற்களிலே 'கொண்ட' என்பதற்குப் பொருள் 'தங்கள் நினைவையே ஏற்றுக் கொண்ட' என்பதாகும். அதாவது, தாங்கள் ஒன்றை நினைக்க, தம் மனைவி முதலியவர் வேறு ஒன்றினை நினைக்காது குடும்பத்தோடு திருமால் அடியார்க்கு அடியாராய் வாழ்வதுவே நல்ல பதம்.

ஒரு நாள் பாகவதர் சிலர், கூட்டமாக திருவனந்தபுரத்துக்குப் போகும் வழியில், திருக்கோஷ்டியூரிலே செல்வநம்பியின் திருமாளிகைக்குச் சென்றனர். அப்போது நம்பி வெளியூர் சென்றிருக்க, அவருடைய நங்கையார், இல்லத்தில் விதைக்காக எடுத்து வைத்திருந்த நெல்லைக் குத்தி அரிசியாக்கி உணவு தயாரித்து அவர்கள் பசியை ஆற்றினார். பின்னர், செல்வநம்பி ஊரிலிருந்து திரும்பி வந்து, விதைக்காக வைக்கப்பட்ட நெல் எங்கே? என்று மனைவியைக் கேட்க, அவள் பரமபதத்திலே விளைவதற்காக விதைத்து விட்டேன் என்று விடையளிக்க, செல்வ நம்பியும் விவரம் கேட்டு ஆனந்தமடைந்தார்.

ஆகவே பாகவத சேவையே யாத்திரையாகச் செல்லும் குடும்பம். ''நல்ல பதத்தால் மனை வாழ்வர்'' என்பதாகும். ஆனால் அடுத்த திருவாய்மொழியின் ஆரம்பத்தில்,

''கொண்ட பெண்டிர் மக்கள் உற்றார்
சுற்றத்தவர் பிறரும்
கண்டதோடு பட்டது அல்லால்
காதல்மற்று யாதுமில்லை
எண்டி சையும் கீழும் மேலும் முற்றவும்
உண்டபிரான்
தொண்ட ரோமாய் உய்யல் அல்லால்
இல்லைகண்டீர் துணையே (9-1-1)''

என்று ஆழ்வார் அருளிச் செய்கிறார். ஆழ்வார் நம்மைப் பார்த்து, வேறு பயன் கருதும்

ஆபாசங்களைத் தவிர்த்து, அவனே ப்ராப்கபன் (பேறு) என்றும், ப்ராபக ஆபாசங்களைக் கழித்து (போலிகளைத் தவிர்த்து) அவனே ப்ராபகன் (பேற்றுக்கு உபாயம்) என்றும் கொள்ளுங்கள். அதாவது நீங்கள் ஒரு காரணம் பற்றி வந்த பந்துக்களான மற்றோரை விடுத்து, இயல்பாகவே உள்ள (நிருபாதிக) பந்துவான அவனையே பற்றி உஜ்ஜீவிக்கப் பாருங்கோள் என்று பரோபதேசம் செய்கிறார்.

அதாவது, கொண்ட பெண்டிரோடும், புதல்வர்களோடும், பாகவதர்களுக்கு அடிமை செய்பவர், இல்லறத்தை நல்லறமாக்கி வாழ்பவர்கள். ஆனால் ஒரு குடும்பத்தில் பாகவதர்களுக்கு அடிமைப்பட்டிருத்தல் என்கிற ஒத்த தன்மை இல்லாதவர்கள், பயன் கண்டதோடு பட்டவர்கள்; காதல் மற்றும் யாதுமில்லாதவர்கள்; இவர்களையே

''கொண்ட பெண்டிர் மக்கள் உற்றார்
சுற்றத்தவர்பிறரும்
கண்டதோடு பட்டது அல்லால்
காதல்மற்று யாதுமில்லை''

என்கிறார்.

இத்தகைய மனைவி (அல்லது கணவன்) உற்றார் உறவினர் ஒருவருக்கு அமைந்து விட்டால், அவர்களோடு எப்படி இணைந்து வாழ முடியும்? அவருக்கு ஒரே துணை எண்டிசையும் கீழும் மேலும் முற்றவும் உண்ட பிரானே என்கிறார் ஆழ்வார்.

திரௌபதி சபையில் மானபங்கப் படுத்தப்பட்ட போது, தர்மத்திலே தலை சிறந்தவர்களான ஐந்து கணவர்களும் அவளுக்கு உதவாமல், தலை குனிந்து வெறும் தரையைக் கீறிக் கொண்டிருக்க, அவர்களை நினையாமல் அவள் கிருஷ்ணனையே நினைத்து, 'கோவிந்தா' என்று அழைக்க, அவளுக்குப் புடவை சுரந்த போதிலும், கிருஷ்ணன், தன் பக்தையை இவ்வளவு தூரம் அவமானப்பட விட்டு விட்டோமே என்று வருந்தி, தூரத்திலே இருக்கிற என்னைக் 'கோவிந்தா' என்று நினைத்து அழுதாள் என்பது யாதுண்டோ, அது வட்டிக்கு வட்டி ஏறின கடன் போன்று, என் மனத்தினுள் நீங்கவில்லை என்று புண்பட்டானன்றோ?

அர்ஜுனன் 'என் காரியங்களை என்னாலே செய்து முடிக்க முடியாது' என்று சோகித்துக் கிடக்க, கண்ணன், எல்லா பாரங்களையும் எம் தலையிலே போட்டுவிடு. உன்னுடைய பகைக் கூட்டத்தையெல்லாம் நாமே போக்கிக் கழிக்கிறோம் என்றானல்லவா?

இப்படிப் பல காரணங்களாலே, அவனே நிருபாதிக பந்து, அவனையே பற்றப் பாருங்கோள் என்று ஆழ்வார் அருளுகிறார்.

குடும்பத்தோடு பாகவத கைங்கர்யம் செய்பவர்க்கு காதல் மற்று யாதுமில்லை முதலிய பாசுரங்கள் பொருந்தாது. கைங்கர்யத்தை இழந்துவிட்டு, இழந்து விட்டோம் என்று திண்டாடிக் கொண்டிருக்கும், கைங்கர்ய பரர்களுக்கே ஆழ்வார் உபதேசம் செய்கிறார் என்பதை அறிந்து, எல்லோரும் இணைந்து நல்ல பதத்தால் பகவத், பாகவத கைங்கர்யம் செய்வோமாக!

''மேலாத் தேவர்களும் நிலத்தேவரும்
மேவித்தொழும்
மாலார் வந்து இளநாள் அடியேன்
மனத்தே மன்னினார்
சேலேய் கண்ணியரும் பெருஞ்
செல்வமும் நன்மக்களும்
மேலாத்தாய் தந்தையும் அவரே
இனியாவாரே (5-1-8)''

என்கிறார் நம்மாழ்வார்

குறிப்பு : நீதிமன்றத்திலே ஒரு சட்டத்துக்குப் பொருள் கூறும் போது, Harmonious Construction என்ற முறையில் விளக்குவர். அது போன்றே இங்கும் முன் பதிக பின் பதிகப் பாசுரங்களை இணைத்துப் பொருள் கொள்ள வேண்டும்.



# திருத்தாண்டக அருளிப்பாடுகள் - 2



முனைவர். அ.அறிவொளி

திருவாரூர்மிகப் பழைய நகரம் அவ்வூரின் பழைமையும் அவ்வூர்க் கோயிலின் பழைமையும் பிற ஊர்களில் உள்ள கோயில்கள் பழைமையும் அவர் மனத்தில் ஒவ்வொன்றாக வருகின்றன.

நீ தனி ஒருவனாக இருந்த போதா? மும்மூர்த்திகளாக நீயே பிரிந்த போதா? இயமனை உதைத்த போதா? மன்மதனை எரித்த போதா? மண்ணுக்கும், விண்ணுக்குமாய் நீ ஊடுருவிய போதா? முனிவர் அனுப்பிய மானைக் கையில் உற்று நீ அழியாதிருந்த போதா? உமாதேவி உன்னில் பாதியாகச் சேர்வதற்கு முன்பா? அல்லது சேர்ந்த பிறகா? என்று ஒவ்வொரு காலப் பழைமையையும் அடுக்கிக் கொண்டு வந்து எப்போது ஆரூரில் கோயில் கொண்டாய் என்று கேட்கிறார்.

**''திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே''** என்ற முத்திரை வாசகத்தைப் பாடல் தோறும் இறுதியில் கேட்டுக் கேட்டுத் திருவாரூர்ப் பெருமையை விளக்குகிறார்.

கால வெள்ளங்களைக் கடந்து நிற்கும் ஆரூர்க் கடவுளை இப்படி நினைத்து முடிவுகாண முடியாது சோம்பினேன் என்பதை இரண்டு பதிகங்களில் முழுதுமாகக் கூறுகிறார்.

**''ஆரூரில் கண்டு அடியேன் அயர்த்த வாறே''** என்றும்

**''ஆற்றானை ஆரூரில் அம்மான் தன்னை**
**அறியாது அடியேன் அயிர்த்த வாறே''**
என்றும் பாடி வியக்கிறார்.

சிவலோகம் செல்வதற்கான வழியை அறியும் சிந்தையைத் தந்தவனை, வேதங்களாலும் அறியமுடியாது அப்பாலாய் இருப்பவனை

**''போற்றாதே ஆற்றநாள் போக்கினேனே''** என்று பாடித்தம் வாழ்வில் இடையில் வந்தத் தொய்வுக்குவருந்துகிறார். இதுவும்ஆரூர்பதிகமே.

திலகவதியாரிடம் திருநீறு பெற்று மீண்டும் சைவனாகிய தலம் திருவதிகை. அதனால் அந்தத் தலத்தை வியக்காமல் இருக்க முடியவில்லை.

இளம் வயதில் இந்தத் தலத்தின் பெருமை தனக்குத் தெரியாமல் போய் விட்டதே என்று இவ்வூர்பதிகத்தில் பாடல் தோறும் பாடுகிறார்.

**''எறிகெடிலத் தானை இறைவன் தன்னை**
**ஏழையேன் நான் பண்டு இகழ்ந்த வாறே''**
என்கிறார்.

இதில் ஏழையேன் என்பதற்கு அறிவு கை கூடாமல் போனது என்பது பொருளாகும்.

இச்சொல்லின் நேர்த்தியால் ஏழைத் திருத்தாண்டகம் என்றே இதை அழைத்தனர்.

இதே உணர்வுடன் திருமுதுகுன்றத்துப் பதிகம் முழுவதிலும்.

**''தீவினையேன் அறியாதே திகைத்த வாறே''**

என்று பாடுகிறார்.

இதுபோல் திருப்பள்ளிமுக் கூடலிலும் பாடல்தோறும்,

**''பயிலாதே பாழேநான் உழனற வாறே''**
என்று பாடுகின்றார்.

ஓமாம் புலியூர் திருத்தாண்டகத்திலும் இந்த உணர்வோடு

**''சீராரும் வட தளி எஞ்செல்வன் தன்னை**
**சேராதே திகைத்து நாள் செலுத்தினேனே''**
என்று பதிகம் முழுதும் பாடுகிறார்.

திருவடியின் சிறப்பு முழுதும் தொகுத்து

**''அரவணையான் சிந்தித்து அரற்றும் அடி அருமறையான்**
**சென்னிக்கு அணியாம் அடி**
**சரவணத்தான் கைதொழுது சாரும் அடி சார்ந்தார்கட்கு**
**எல்லாம் சரணாம் அடி**
**பரவுலார் பாவம் பறைக்கும் அடி பதினெண்**
**கணங்களும் பாடும் அடி**
**திரைவிரவு தென்கெடில நாடன் அடி திருவீரட்**
**டானத்து எஞ் செல்வன் அடி''**

என்று புகழ்ந்து பாடியதால் திருமந்திரத்தாண்டகம் என்றே கூறினார்.

நல்லூரில் இவர் வேண்டியபடி இறைவன் இவர் தலைமீது தன் திருவடிகளை வைத்து அருள்பாலித்தான். அதை

**''நனைந்தனைய திருவடிஎன் தலைமேல் வைத்தார்**
**நல்லூர் எம் பெருமனார் நல்ல வாறே''**
என்று பாடுகிறார்.

திருவடியில் திருமஞ்சனம் ஆட்டப்பட்ட ஈரம் தன் தலையில் உணரும்படி வைத்ததால் **''நனைந்து அனைய திருவடி''** என்று பாராட்டினார். பாடல்தோறும் தன் தலை செய்த இப்புண்ணியத்தையே புகழ்கின்றார்.

எல்லாப் பொருளுமாக எல்லாச் செயலுமாக எல்லா அறிவுமாக எல்லாத் திறமுமாக இறைவனே இருக்கிறான் என்பதைத் திருப்புன்கூர் திருத்தாண்டகத்தில்

பாட்டு தோறும் பாடினார்.

**''நீதனேன் என்னே நான் நினையா வாறே''** இப்படி எல்லாம் நீஎன்பதை நினைத்துப் பார்க்காத நான் நீசனே ஆவேன் என்று தன்னைத் தாழ்த்திக் கொள்கிறார்.

பூம்புகார்க்கு மேற்கே 3 கி.மீ.ல் திருவலம்புரம் என்ற தலம் உள்ளது.

இன்றும் கூட இதை விசாரித்துத்தான் போக வேண்டும். காரணம் காவிரியின் இருகரையிலும் ஊர்கள் இருப்பதால்.

அப்படி விசாரித்த போது ஓர் அழகிய இளைஞன் வந்தான். அவனை அப்பரடிகள் திருவலம்புரம் எப்படிப் போக வேண்டும் என்று கேட்டிருக்கிறார்.

**''என்கூடவே வரமுடியுமா நான் அங்கேதான் போகிறேன்''** என்று விசுக்கென முன்நோக்கி நடக்கிறான் அந்த வாலிபன்.

முதுமையால் அவனைத் தொடர முடியவில்லைஅவன்இளமைஅவன்அழகுஇனிய வார்த்தை இவற்றில் ஈடுபடுவதா அவன் காலில் செருப்பணிந்து 'விசுக்கு விசுக்கு' என அழகாக நடக்கிறானேஅந்தநடையழகில்ஈடுபடுவதா?

இப்படி எண்ணும் போது ஊர் வந்துவிட்டது. இதுதான் அந்தக் கோயில்,' நான் என் ஊருக்குப் போகிறேன் என்று மேலும் நடப்பதாகப் போக்குக் காட்டினார்.

பட்டுடை, பவளமேனி, அதிலே சந்தனப் பூச்சு, இவைகளோடு அவன் போனானேதவிர ஒரு நொடியில் மறைந்துவிட்டான்.

அவன் நடையழகில் ஈடுபட்ட அப்பரடிகள் அதே நினைப்போடு கோயிலுக்குள் போகிறார்.

முன்பு பிரிந்து மறைந்த இளைஞன் மீண்டும் வருவது போல் ஒரு பிரம்மை.

இவருக்கு முன்னால் அவன் நடக்கிறான் கடைசியாகத்திருக்கோயில் கருவறைக்கே போய்விட்டான்.

பார்த்தால் அவன் போல வடிவமும் தெரிகிறது சிவலிங்கமும் தெரிகிறது.

இரண்டு வடிவங்களும் ஒன்றில் ஒன்று மாறி மாறி ஐக்கியமாகின்றன.

இதை அப்படியே ஒரு தாண்டவமாகப் பாடினார் அப்பரடிகள்.

இப்பாடலைப் படித்தானோ படிக்க கேட்டானோ அந்தச் சிற்பி பிட்சாடணராசு ஓர் உற்சவ மூர்த்தியைப் படைத்தான்.

அவ்வடிவில் செருப்புக்கும் நடக்கும் காலுக்கும் ஒரு விரல் இடைவெளிவைத்தான். அதாவது இன்றும் அக்காட்சி நடை நடப்பதாகவே நம்மை நினைக்கவைக்கிறான்.

**''பட்டுடுத்துப் பவளம்போல் மேனி எல்லாம்**
**பசுஞ்சாந்தம் கொண்டணிந்து பாதம் நோவ**
**இட்டுஎடுத்து நடமாடி இங்கே வந்தார்க்கு**
**எவ்வூரீர் எம்பெருமான் என்றேன் ஆவி**
**விட்டிடுமாறு அதுசெய்து விரைந்து நோக்கி**
**வேறோர் பதி புகக்போவார் போல**
**வட்டணைகள் படநடந்து மாயம் பேசி**
**வலம்புரமே புக்கு அங்கு மன்னி னாரே''**

என்பது அப்பாடல்

வட்டணைஎன்பதுஅழகியநடையின்திறம்.

முனிவர்களின் மனைவியர்க்கு அகந்தைநீக்க அழகியவடிவில் நடந்தவர் பிட்சாடணர். எனவே இப்பாடலுக்கு ஏற்பச் சிற்பி அத்திருமேனியைச்செய்தார் என்க.

- தொடரும்




திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் – 11.05.07 அன்று நடைபெற்ற அர்ச்சகர் பயிற்சி நிலையத் துவக்க விழாவில் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் முனைவர். அர.பழனியாண்டி, இ.ஆ.ப., அவர்கள், இணை ஆணையர்/ செயல் அலுவலர் திரு.போ.இராமராஜு அவர்கள், திருநெல்வேலி மண்டல இணை ஆணையர் திரு.பா.பாஸ்கரன் அவர்கள், திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் அறங்காவலர் திரு.சு.கு.சந்திரசேகரன் அவர்கள், அறங்காவலர் திருமதி. பா.திலகவதி அவர்கள் மற்றும் மாணவர்கள்.

நினைவலைகள்

# கந்தபுராணம் நுண்பொருள்

- கிருபானந்தவாரியார்

''அருவமும் உருவும் ஆகி அநாதியாய்ப்
பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர்
மேனியாகக்
கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள்
பன்னிரண்டும் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்கு உதித்தனன்
உலகம் உய்ய.''

கந்த புராணத்தில் ஒரு சிறந்த பாடல். சுவாமிக்கு 'அருவமும் உருவும் ஆகி', அது கி.பி.யா? கி.மு.வா? என்றான் ஒருத்தன். ''அநாதியாய்''- அவருக்கு ஆதியில்லை. 'பலவாய் ஒன்றாய்'-தோடு, செயின், மோதிரம், வளையல் அணிகலன்கள் பல. தங்கம் ஒன்றுதானே. பஞ்சு ஒன்று தானே, வேஷ்டியாய், சட்டையாய், அங்கவஸ்திரமாய், கைத்துண்டாய் (கர்ச்சிப்பாய்) வருகிறது. மண் ஒன்று தானே. பானை, சட்டி, அகல், மடக்கு என ஆகிறது. அதைப் போல ஒரே இறை பலவாய் இருக்கிறது என்றார். ''பலவாய் ஒன்றாய்'' - ஏழு ஸ்வரந்தானே தோடி, கல்யாணி, பைரவி, ஆனந்த பைரவி, ஸப்த ஸ்வரம்தான் கிட்டத்தட்ட 3 லட்சம் இராகங்களாகப் பரிணமிக்கின்றன. ஏழு ஸ்வரங்களே இத்தனை ராகங்களாக விரிவடைவது போல, ஒரு தங்கமே பல அணிகலன்களாக ஆவது போல, பஞ்சு ஒன்றே பல ஆடைகள் ஆவது போல, ஆண்டவன் ஒருவன் தான் பல்வேறு வடிவங்களாக இருக்கின்றான்.

''பலவாய் ஒன்றாய்.... பிழம்பதோர் மேனியாக'' கூர் என்ற வார்த்தைக்கு மிகுதல் என்று பெயர். ''கருணை கூர் முகங்கள் ஆறு திருமுகங்கள். 12 திருக்கரங்கள். கச்சியப்பர் ஒன்று சொல்லவில்லை. 18 கண்கள் என்று சொல்லியிருக்க வேண்டும். கச்சியப்பர் சொல்வில்லை. வடமொழி ஸ்காந்தத்திலே ''ஷட்வக்த்ரம் துவாதசபுஜம், அஷ்டாதசவிலோசனம்,'' என்று வியாஸ பகவான் வடமொழியிலே சொன்னார். 'ஷட்வக்த்ரம்'- ஆறு திருமுகங்கள். 'துவாதசபுஜம்' பன்னிரண்டு திருக்கரங்கள். ''அஷ்டாதசவிலோசனம்'- பதினெட்டுக் கண்கள். முருகப் பெருமானுக்குப் பதினெட்டுக் கண்கள். அநேகம் பேர் 12 கண்கள் தானென்று நினைத்துக் கொண்டிருப்பார்கள். பதினெட்டுக் கண்கள் என்பது அநேகருக்குத் தெரியாது. சிவபெருமானுக்கு மூன்று கண்கள். ஸோமன், சூரியன், அக்கினி, முக்கண்ணன். முருகப் பெருமான் சிவகுமாரன். அப்பாவைப் போலத் தானே பிள்ளையும் இருக்கும். அப்பாவுக்கு மூன்று கண்கள் என்றால் முருகனுக்கும் மூன்று கண்கள் தானே. அப்பொழுது ஆறுமுகத்திலே, 6 X 3 = 18 கண்கள். விநாயகருக்கு மூன்று கண்கள்.



த்ரியம்பக விநாயகன். த்ரியம்பகி- அம்பாள். அப்பொழுது முருகப் பெருமானுக்கு 18 நேத்திரங்கள், 'அஷ்டாதசவிலோசனம்' என்பது வடமொழி ஸ்காந்தம். ஏன் கச்சியப்பர் சொல்லவில்லை- மறந்து விட்டாரோ? இல்லை. வடக்கே தைரியம் உண்டு. தபஸ் உண்டு. கூர்த்த ஞானம் சற்றே உண்டு. தெற்கு நோக்கி வர வர ஞானம் உண்டு. வடக்கு நோக்கிப் போகப் போக தைரியம் உண்டாகும். வடநாட்டாருக்கு முரட்டுத் தைரியம். அதனால்தான் ராமாவதாரம், கிருஷ்ணாவதாரம் எல்லாம் வடக்கே. அப்படி வடக்கே போகப் போகத் தவம் அதிகம். தெற்கே வரவர அறிவு. ஒருவர் சொன்னார். வடக்கே போனால் விசாலமாய் இருக்கிறது. தெற்கே வரவர நிலம் குறுகிப் போகிறதே என்றார். குறுகிப் போனால் ஞானம் இருக்கிறது. நான் ஒரு உதாரணம் சொன்னேன். இளநீர் வெட்டும் கத்தி, சவுளம் பண்ணுகிற கத்தி பின்பக்கம் விசாலமாய் இருக்கும். முன்பக்கம் கூராக இருக்கும். எது வேலை செய்கிறது? என்று கேட்டேன்.

கத்தி பின் பக்கம் விசாலமாயிருக்கும். முன்பக்கம் கூராயிருக்கிறது. எது வேலை செய்கிறது? கூரான பக்கம் தானே வேலை செய்யும். வடக்கே சிறந்த விவேகானந்தர் இருந்தார். கன்னியாகுமரியிலே தானே ஞானம் வந்தது. உலகம் தெரிந்த வரலாறுதானே. அங்கேதான் ஞானம் வந்தது. அவர் இருந்த இடத்துக்கு 97 லட்சம் செலவழித்தார்கள். இன்றைக்கும் ஆழ்வாராதிகள், நாயன்மார்கள், கம்பர், சங்கரர், இராமானுஜர், மத்வாச்சாரியார் எல்லோரும் தெற்கேதான் அவதாரம் செய்தார்கள். வடக்கே ஒரு ஞானாசிரியன் பிறந்தான் என்று இதுவரைக்கும் வரலாறு கிடையாது. தென்னாட்டில் உள்ளவர்களுக்கு ஆறுமுகம் என்றால் 18 கண்கள் என்று இவனாக எண்ணிக் கொள்வான். ஒரு குழந்தையை ஒரு அம்மா வைத்துக் கொண்டிருந்தால், அம்மா உங்கள் குழந்தையா என்றால் கல்யாணம் ஆய்விட்டது என்று இவன் தீர்மானம் பண்ணிக் கொள்வான். குழந்தை வைத்துக் கொண்டிருக்கிற அம்மாவைப் பார்த்துக் கல்யாணம் ஆயிற்றா என்று கேட்கக் கூடாது. ஆறுமுகம் என்றால் 6★3=18 என்று தமிழன் தெரிந்து கொள்வான். அதனால் கச்சியப்பர் சொல்லவில்லை. ''கருணை கூர் முகங்கள் ஆறும், கரங்கள் பன்னிரண்டும் கொண்டே, ஒரு திருமுருகன் வந்து ஆங்கு உதித்தனன் உலகம் உய்ய'' - உதித்தனன் என்றால் இங்கு பிறந்தான் என்று அர்த்தமில்லை. சூரியன் உதித்தான் என்றால் பிறந்தான் என்றா அர்த்தம்?

என்றைக்கும் உள்ள ஆதித்த பகவான் சிலகாலம் மறைந்திருப்பார். இப்போது வெளிப்படுகிறார். அதுபோல என்றைக்கும் உள்ள எம்பெருமான் அப்போது வெளிப்பட்டுத்தோன்றினார். ''உதித்தனன் உலகம் உய்ய''.

''உரககண... பூஜிக்கும் வானவனும்'' பிரும்மா, விஷ்ணு, இந்திரன், சந்திரன் எல்லோரும் எம்பெருமானை வணங்கி அருள் பெற்றார்கள். அந்தப் பிரபு ஞானமே ஒரு உருவம். ஞானந்தான் உருவாகிய நாயகன். தந்தைக்கே பிரணவத்தை உபதேசித்தார். அதனால் தான் அவருக்குச் சுவாமிநாதன் என்று பெயர். ஒரு குறிப்பு உங்களுக்கு நான் சொல்லுகிறேன். எப்பொழுது நாம் எழுதத் தொடங்கினாலும், ஒரு சுழி போட்டு, இப்படி ஒரு கோடு, அதற்குப் பேசாத எழுத்து என்று பெயர். பிள்ளையார் சுழி என்று பெயர். அன்று தொட்டு இன்று வரைக்கும் எல்லா நூல்களிலும் முன்னோர்கள் எழுதி வந்தசுழி. அந்த எழுத்தைவாயினாலே உச்சரிக்க முடியாது. பேசாத எழுத்து என்று பெயர். அதிலிருந்து தான் அகில உலகமும் வெளிப்பட்டுத் தோன்றியது. (உ) பிள்ளையார் சுழி என்று பெயர்.

அதனுடைய நுட்பத்தை உங்களுக்கு நினைவுப் படுத்துகிறேன். இந்த உலகங்கள் எல்லாம், உயிர்கள் எல்லாம் பிரம்மத்திலிருந்து தோன்றிப் பிரம்மத்தில் ஒடுங்குகின்ற ''தஸ்யதேஹேசம் உற்பத்திம் யாம் சண்டானிம் புனர் ஸயம்'' அதாவது எல்லா உலகங்களும் இறைவனிடத்திலே தோன்றி இறைவனிடத்திலே ஒடுங்குகின்றன என்று வேதம் சொல்கிறது. இந்த உலகம் அழிவில்லாதது. இறைவன் ஞானமே வடிவானவன். சித்து என்றால் அறிவு, அசித்து என்றால் அழிவில்லாதது. சித்தாயிருக்கிற பிரும்மத்திலிருந்து அசித்தான உலகம் தோன்றாது. தர்க்கரீதியாக அப்படித் தோன்றக் கூடாது. ப்ரம பதிவிரதை வயிற்றிலிருந்து பொல்லாத குழந்தை தோன்றாது. தாயைப் போலத்தான் சேய் இருக்கும். அதாவது அகலமாய் இருக்கிற பீஸிலிருந்து கிழித்த துண்டு அகலக் கட்டையாக இருக்காது. பீஸ் போலத்தானே துண்டு இருக்கும். பிரும்மம் போலத்தானே உலகம் இருக்க வேண்டும். பிரும்மத்திலிருந்து உலகம் தோன்ற வேண்டுமானால் உலகம் அசித்து அல்லவா?

சித்திலிருந்து அசித்து தோன்றாது. உலகம் அசித்து. அசித்திலிருந்து அசித்து தோன்றுகிறது. அந்த மாயையாயிருக்கிற மலக் கருவிலிருந்து உலகம் தோன்றுவதற்குச் சித்தாயிருக்கின்ற பிரும்மம், உதவி செய்வதாலே பிரும்மத்திலிருந்து உலகம் தோன்றியது என்று வேதம் சொல்கிறது.

பிரம்மத்திலிருந்து உலகம் தோன்றி பிரம்மத்திடம் ஒடுங்குகிறது என்று வேதம் சொல்லுகிறது. அதைச் செய்கின்ற அர்த்தம் தான் தவறு. வேதத்தை நாம் நேரடியாகப் போய் அணுகக் கூடாது. ஆசாரியன் மூலம் அணுக வேண்டும். தாமரைக்குப் பங்கஜம் என்று ஒரு பெயர் உண்டு. பங்கஜம்- பங்கம் என்றால் சேறு, ஜம் என்றால் தோன்றுவது. சேற்றிலே தோன்றுவதனாலே தாமரைக்குப் பங்கஜம் என்று பெயர். அதை ஆராய்ச்சி பண்ணினால் அது சேற்றிலா தோன்றுகிறது? தாமரைக்கு ஒரு விதை உண்டு, தாமரை விதையென்று, அந்த வித்திலே இருந்து தோன்றுகிறது தாமரை. அப்பொழுது என்ன பேர் வைக்க வேண்டும்? வித்தஜம் என்று வைக்க வேண்டும். வித்திலிருந்து வந்தால் வித்தஜம் என்று தானே வைக்க வேண்டும்? அப்படிப் பெயர்வைக்கவில்லை. பங்கஜம் என்று முன்னோர்கள் வைத்தார்கள்.

என்ன காரணம்? தொடரும்

நன்றி. செஞ்சொல் உரைக்கோவை நூல்





பழனி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில் - 11.05.2007 அன்று நடைபெற்ற அர்ச்சகர் பயிற்சி நிலையத் துவக்க விழாவில் மாவட்ட ஆட்சியர் இரா. வாசுகி, இ.ஆ.ப., அவர்கள் அறங்காவலர் குழு தலைவர் திரு எஸ்.வி. பாலசுப்பிரமணியன் அவர்கள், அறங்காவலர் திரு. மோகன் பி. கந்தசாமி அவர்கள், இணை ஆணையர் தி. இராசமாணிக்கம் அவர்கள், துணை ஆணையர் திரு. ஆர். சுதர்சன் அவர்கள் செயற் பொறியாளர் திரு. இராமகிருஷ்ணன் அவர்கள், ஆன்றோர்கள் மற்றும் மாணவர்கள்.

# மாணிக்க வாசகரும் ஆவுடையார் கோயிலும்

அழ.முத்துப்பழனியப்பன்,எம்.ஏ.பி.எல்.,




தமிழ்ச் சைவ மரபில் மாணிக்க வாசகரின் பங்கு அளவிடற்கரியது. பாண்டிய நாட்டின் பேரமைச்சராக விளங்கினார் அவர், அரசுப் பணிக்காக குதிரை வாங்க, கீழைக் கடற்கரைக்குச் சென்றார். செல்கின்ற வழியில் இறைவன் குருவடிவாகி, ஒரு குருந்த மரத்தடியில் இவரை ஆட்கொண்டான். குதிரை வாங்கக் கொண்டுபோன பொருளைக் கொண்டு, இறைவனுக்குக் கோயில் எழுப்பினார். ''அவனுக்கே'' கட்டிய கோயிலானாலும் அது அரசுப்பணமல்லவா? அனுமதியில்லாமல் கோயில் கட்டியது குற்றம் தானே, ஆகவே அரசனால் சிறைப்பட்டார் இறைவனிடம் வேண்டினார். அடியார்கள் அரற்றினால், ஆண்டவன் சும்மா இருக்க முடியுமோ? மணிவாசகரைக்காப்பாற்ற, இறைவனே குதிரை வாணிகனாகி வந்தான், நரிகளைப் பரிகளாக மாற்றினான், மீண்டும் பரிகளை நரிகளாக்கினான். வைகையில் வெள்ளம் வரச் செய்தான். வந்திக் கிழவியிடம் பிட்டு வாங்கி உண்டான். பாண்டிய மன்னனிடம் பிரம்படியும் பட்டான். இவ்வாறு அடியவர்க்காக இறைவன் ஆடிய ஆடல்கள்பல.

பின்னர் அமைச்சராக அதிகாரத்தில் விளங்கிய மணிவாசகர் சிவனடியாராக, சிறந்த கவிஞராக மாறிப்போனார். அவரது பாடல்கள் அருமையானவை. ஆத்மாவின் தேடல் அவை. எலும்பையும் நெகிழச் செய்யும் இனிமை படைத்தவை. இதன் பெற்றிமை கண்டு, ஜி.யூ போப் எனும் கிறித்தவப் பாதிரியார் சாகும் போது, தான் 'ஒரு தமிழ் மாணவன்' என்று தன் கல்லறையிலும் பொறிக்கச் செய்தார். அக்கல்லறை இன்றும், இலண்டனில், வெஸ்ட் மினிஸ்டர் தேவாலயத்தில் உள்ளது. திருவாசகத்தை ஆங்கிலத்தில் முதன் முதலில் மொழி பெயர்த்தவரும் அவரே. இவ்வாறு தமிழ்ச் சைவ மரபில் மணிவாசகரின் பங்கு குறிப்பிடத்தக்கது. அவரது நூல்களான திருவாசகமும், திருக்கோவையாரும், திருமுறைகளில் எட்டாவதாகத் தொகுத்துள்ளனர். மாணிக்கவாசகரின் திருவாசகத்துக்கு உருகார் ஒரு வாசகத்துக்கும் உருகார் என்பது உண்மையே.

## ஆவுடையார் கோயில்


புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கிக்கு அருகில் ஆவுடையார் கோயில் அமைந்திருக்கிறது. இதுவே மாணிக்கவாசகர் போற்றும் திருப்பெருந்துறை. குதிரை வாங்க வந்த மாணிக்கவாசகருக்கு, இறைவன் குருவடிவாக இங்கே தான் அருள் புரிந்தான். மாணிக்கவாசகர், குதிரை வாங்க வந்த பணத்தைக் கொண்டு கோயில் கட்டியதும் இந்தக் கோயில்தான். மாணிக்கவாசகர் கட்டிய கோயில், பின்னாலில் பாண்டிய மன்னர்களால்


திருத்தம் செய்யப்பட்டிருக்க வேண்டும். தற்போதுள்ள கோயில் ஒரு கலைக்கோயில். இது போன்ற இந்துக்கோயில் எங்கும் இல்லை எனலாம். இந்தக் கோயில் கருவறையில், இலிங்கத் திருமேனியோ அல்லது வேறு எந்த மூர்த்தங்களோ கிடையாது. நந்தி இல்லை, பலிப்பீடம் இல்லை, கொடி மரம் இல்லை, அம்பிகைக்காக அமைக்கப்பட்டுள்ள, கோயிலில் அம்பிகையின் பாதங்களே உள்ளன. இதுவும், அண்மைக்காலத்தில் சேதுபதி மன்னர் பாஸ்கர சேதுபதி காலத்தில் அமைக்கப்பெற்றது என்கிறார்கள். கருவறையில் புழுங்கல் அரிசியில் சமைத்த அன்னமும், பாகற்காய் கறியும் இறைவனுக்குப் படைக்கப்படுகிறது. இத்தலத்தில் உள்ள ஒரே ஒரு மூர்த்தம் மாணிக்கவாசகர் மட்டுமே. இவருக்கு மட்டுமே தனிச் சந்நிதி உண்டு, மூலவர் கருங்கல் திருமேனியும் உண்டு, உற்சவத் திருமேனியும் உண்டு. இந்தக் கோயிலில் பெரிய தேர் உண்டு. திருவிழாக்கள் உண்டு. இவற்றில் எல்லாம் இறைவனுக்குப் பதிலாக பங்கு கொள்வது மாணிக்கவாசகர் மட்டுமே. இவரே தேர் மீது வருவார். திருவிழாக்களும் இவருக்காகவே, இது ஒரு புதுமையானது. இறைவனுக்குப் பதிலாக இறையடியார் பங்கு கொள்வது இத்தலத்தில் மட்டுமே.



இது நமக்கு இரண்டு செய்திகளைக் குறிக்கிறது.

ஒன்று - இறைவனும், மனிதனும் வேறில்லை, மனிதன் தெய்வமாகலாம்.





இரண்டு - இக்கோயில் மாணிக்கவாசகர் என்ற தமிழ்க் கவிஞருக்காக, பாண்டிய மன்னர்கள் கட்டிய கலைக் கருவூலம். ஆம் இது எழுத்தில் எழுதவொண்ண சிற்பக் கருவூலம். இராசகோபுரத்தில் இருந்து, கருவறையை நோக்கி நாம் பார்க்கும்போது, நமக்கு நினைவுக்கு வருவது, பழங்காலப் புகைப்படம் எடுக்கும் கருவி. ஆம், முற்காலத்தில் தலையில் துணியைப் போட்டுக் கொண்டு, படம் பிடிப்பார்களே அந்தக் காமிரா போல, முதல் வாயில் அகலம், அதற்கு அடுத்த வாயில் சற்றுக் குறைந்த அகலம், இப்படியே படிப்படியாக சிறிதாக்கி, இறுதியில் கருவறை வாயில் என்ன அற்புதம். இம் மட்டுமோ, இங்குள்ள மண்டபத்தில் உள்ள கொடுங்கைகள் அதன் உட்புறத்தில் காணப்படும் சிற்பங்கள் எழுத்தில் வடிக்க முடியாத அற்புதம், அற்புதம். இன்றைக்கும் பெண்களின் சேலைகளுக்கு பார்டரை இக்கோயில் கற்சிற்பங்களில் தேடுகின்றனர் சேலை வடிவமைப்பாளர்கள். அத்தனை வகை வகையான கல் வேலை நுணுக்கங்கள், குதிரைச் சேவகன் ஒருவனின் சிலை முதல் குறப்பெண்வரை, எத்தனை சிற்பங்கள். இப்படி ஒரு சிற்பக் கருவூலம் இது. அதனால்தான் அக்காலத்தில, சிற்ப வேலை தொடர்பான ஒப்பந்தங்கள் எழுதும்போது, கோயில் கட்டும் சிற்பிகள்

''ஆவுடையார்கோயில் கொடுங்கை,
அடங்கலுக்குப் புறத்தி'' - அதாவது

ஆவுடையார்கோயில் கொடுங்கை போல மீண்டும் ஒன்றைத் தங்களால் படைக்க முடியாது என்று எழுதிக் கையொப்பமிடுவர்.

இத்தகையை சிற்பக் கருவூலத்தை நீங்களும் ஒருமுறை சென்று தரிசிக்கலாமே.

**சின்ன ஆவுடையார் கோயில்**

சின்னஆவுடையார் கோயிலைப் பற்றி பல சைவ அன்பர்கள் அறிந்திருப்பார்கள். இவ்வூரைப் பற்றி பலருக்குத் தெரியாது. இக்கோயிலும் மாணிக்கவாசகர் வரலாற்றோடு தொடர்புடையது. இவ்வூர் பட்டுக் கோட்டைக்கு அருகாமையில் உள்ளது. ஊரின் பெயரே சின்ன ஆவுடையார் கோயில்






என்பதாகும். இவ்வூரில் உள்ள ஆத்மநாதசுவாமி கோயில், அளவிற் சிறியது, சிற்பங்களும் அதிகம் இல்லை. மூலவர் உண்டு. மாணிக்கவாசகர் வரலாற்றில் தொடர்புடையது என்று கருதப்படுகிறது காரணம், இவ்வூர் கடற்கரையில் உள்ளது. இந்தக் கோயிலைத் தாண்டிச் சென்றால் அருகாமையில் மரங்கள் அடங்கிய மணற்பரப்பு உள்ளது. பாண்டி நாட்டின் முதலமைச்சராக விளங்கிய மாணிக்கவாசகர், கடற்கரையில் உள்ள இந்த ஊரில்தான். அராபியர்களிடம், குதிரை வாணிகம் செய்ய வந்தார் என்றும் இங்குள்ள குருந்த மரக்காட்டில் இறைவன் சிவனடியாராகக் காட்சி தந்தார் என்றும், ''நயன தீட்சை'' தந்தார் என்றும், திருப்பெருந்துறைக்கு வா என்று சைகை கூறி மறைந்துவிட்டார் என்றும் கூறப்படுகிறது.

மாணிக்கவாசகர், வரலாற்றுடன் தொடர்புடைய இந்த இரண்டு கோயில்களையும், அன்பர்கள் அவசியம் சென்று கண்டு வழிபட வேண்டும்.




22.05.2007 அன்று நடைபெற்ற கிராமக் கோயில் பூசாரிகள் நல வாரியக் கூட்டத்தில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் மாண்புமிகு கேஆர். பெரியகருப்பன் அவர்கள் மற்றும் உறுப்பினர்கள்.

சிறப்பாசிரியர் மற்றும் வெளியிடுவோர் : திருமிகு **த. பிச்சாண்டி,** இ.ஆ.ப., சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர் : தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 600 034. தொலைபேசி : 28334811/12/13
ஆசிரியர் (கூ.பொ.) : ம. தேவேந்திரன், பி.எஸ்சி., பி.எல்., துணை ஆணையர்
அச்சிடுவோர் : குணசுந்தரி மாடர்ன் ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை -21. தொலைபேசி : 25967929



# அருள்மிகு கபர்தீஸ்வர சுவாமி திருக்கோயில், திருவலஞ்சுழி

## (வெள்ளை பிள்ளையார் திருக்கோயில்)

### (சுவாமிமலை அருள்மிகு சுவாமிநாதசுவாமி திருக்கோயிலின் இணைக்கோயில்)

"என்ன புண்ணியம் செய்தனை
நெஞ்சமே இருங்கடல் வையத்து
முன்னம் நீபுரி நல்வினைப்
பயனிடை முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு
வலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னி யாதரித் தேத்தியும்
பாடியும் வழிபடும் அதனாலே."

– சம்பந்தர்

சோழநாட்டில் நால்வர்களால் பாடல்பெற்ற காவிரி தென்கரை சிவத் தலங்களில் திருவலஞ்சுழி அருள்மிகு கபர்தீஸ்வரர் திருக்கோயில் 25 வது தலமாகும். திருஞானசம்பந்தர் மற்றும் திருநாவுக்கரசு சுவாமிகளால் பாடப்பெற்றதாகும். இவ்வூரில் காவிரி பிலத்தில் இறங்கியதால் காவிரியினை திரும்ப மேல் கொண்டுவர ஒரு முனிவரோ அல்லது மன்னரோ இறங்கினால் காவிரி மேல் வரும் என அசரிரி வாக்குப்படி ஹேரண்ட முனிவர் பிலத்தில் இறங்கியபின் காவிரி மேல் வந்து வலமாக சென்றதால் திருவலஞ்சுழி என இவ்வூர் பெயர்பெற்றது.

தேவர்களும், அசுரர்களும் அமிர்தம் வேண்டி திருப்பாற்கடலில் மகாமேரு மலையினை மத்தாக கொண்டு வாசுகி என்கிற பாம்பினை கயிறாக கடைந்தபோது அமிர்தம் கிடைக்காமல் தாமதபட்டது. விநாயகர் பூஜையின்றி துவங்கியதால் தடைபடுகிறது என்பதால் உடன் கடல்நுரையினை விநாயகராக பிரதிஷ்டை செய்து வழிபட்டபின் அமிர்தம் கிடைக்கப்பெற்றது. இவ்வினாயகரே சுவேத விநாயகராகும். தேவேந்திரன் இவ்விநாயகருடன் பல சிவத் தலங்கள் சென்று வழிபட்டு வரும்போது இத்தலத்து இறைவனை வழிபட்டு விநாயகரை எடுத்துச் செல்ல முற்படும்போது தாம் இத்தலத்தில் தங்கி அருள்பாலிப்பதாக தெரிவித்தவாறு தனது ரதத்தில் விநாயகரை எழுந்தருளச் செய்து சென்றார். விநாயகர் சதுர்த்தி அன்று தேவேந்திரன் வந்து வழிபடுவதாக ஐதீகம் அன்றைய தினம் தேவேந்திர பூஜை சிறப்பாக செய்விக்கப்படுகிறது.

இத்தலத்து இறைவன் கபர்தீஸ்வரர் (சடைமுடிநாதர்) இறைவி பெரியநாயகி (பிரஹன் நாயகி) சுவாமி கோயிலுக்கு வலதுபுறம் அம்மன் கோயில் உள்ளது. திருமணக் கோலத்தில் அருள்பாலிப்பது சிறப்புக்குரியதாகும். சோழர் காலத்தில் அதிக அளவில் இத்திருக்கோயிலில் திருப்பணிகள் செய்துள்ளனர்.

பெருஞ்சிறப்பு பெற்ற திருக்கோயிலில் 1971ஆம் ஆண்டு திருப்பணி செய்து கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. தற்போது 35 ஆண்டுகளுக்கு பின்னர் ரூ.80,00,000/– மதிப்பீட்டில் திருப்பணிகள் செய்யப்பட்டு வருகிறது. இத்திருக்கோயில் திருப்பணிக்கு நன்கொடை வழங்கி திருவருள் பெற கேட்டுக் கொள்கிறோம்.


<u>நன்கொடை அனுப்பவும் மேலும் விபரங்களுக்கு தொடர்புகொள்ள</u>
துணை ஆணையர் / செயல் அலுவலர்
அருள்மிகு சுவாமிநாதசுவாமி திருக்கோயில்
சுவாமிமலை–612302
போன்: 0435–2454421
**Website. www.swaminathaswamytemple.org**
**e-mail : swamimalai@sancharnet.in**



ச.இலட்சுமணன், M.Sc., BL.,
துணை ஆணையர்/ செயல் அலுவலர்

டி.எஸ்.ராஜகோபாலன்
தலைவர் அறங்காவலர் குழு

ஆர்.கணேஷ் வெ.மணிவாசகம் நீலாவதிபாலசுப்பிரமணியம் பா.ஸ்ரீதர்
அறங்காவலர்கள்

பதிவு எண் : TN / PMG / (CCR) / 707 / 06-08 / WPP No. 451/06-08




Since 1928 Nalli®

First and the Finest...

என்றும் உங்கள் சேவையில்

நல்லி சின்னசாமி செட்டி

பனகல் பார்க், தி.நகர், சென்னை-17. தொ. பே. : 24344115 / 42604567. *Fax : (044) 24343062*

*Email : inquiry@nalli.com    Website : www.nalli.com*